# யானைகளைப் பற்றிய

# வித்தியாசமான செய்திகள்





பாபநாசம் குறள்பித்தன்

மணிமேகலைப் பிரசுரம்

# யானைகளைப் பற்றிய வித்தியாசமான செய்திகள்

தொகுப்பு :
பாபநாசம் குறள் பித்தன்

பதிப்பாசிரியர் :
லேனா தமிழ்வாணன், எம்.ஏ.,

மணிமேகலைப் பிரசுரம்
தபால்பெட்டி எண் : 1447
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 044-4346082

# நூல் விபரம்


நூல் தலைப்பு — யானைகளைப் பற்றிய விசித்திரமான செய்திகள்

தொகுப்பு — பாபநாசம் குறள் பித்தன்

மொழி — தமிழ்

பதிப்பு ஆண்டு — 1998

பதிப்பு விபரம் — முதல் பதிப்பு

உரிமை — மணிமேகலைப் பிரசுரம்

தாளின் தன்மை — 11.2 கி.கி.

நூலின் அளவு — கிரௌன் சைஸ் (12½X18½ செ.மீ.)

அச்சு எழுத்து அளவு — 10 புள்ளி

மொத்த பக்கங்கள் — 92

---

நூலின்விலை — ரூ. 17.00

---

அச்சிட்டோர் — ஸ்கிரிப்ட் பிரின்டர்ஸ், கோடம்பாக்கம், சென்னை-24.

நூல் கட்டுமானம் — தையல்

வெளியிட்டோர் — மணிமேகலைப் பிரசுரம், சென்னை -17,

# விற்பனையாகின்றன

## விலங்கியல்

| | |
|---|---|
| நாய் வாங்குபவர்களுக்கும், வளர்ப்பவர்களுக்கும் நல்ல யோசனைகள் | 13-00 |
| நாய்களை நல்ல முறையில் வளர்ப்பது எப்படி? | 17-00 |
| கடலின் மீன்களைப் பற்றிய வியப்புக்குரிய விஷயங்கள் | 18-50 |

## வனவளம்

| | |
|---|---|
| உலகத்து மிருக இனங்கள் | 13-00 |
| இந்திய வனவிலங்குச் சரணாலயங்கள் | 16-00 |
| உலகத்துப் பறவை இனங்கள் | 15-00 |
| இந்தியப் பறவைச் சரணாலயங்கள் | 12-00 |

## அறிஞர் மொழி

| | |
|---|---|
| அறிஞர்களின் சிலேடைப் பேச்சுக்கள் | 14-00 |
| தமிழ்ப் புலவர்களின் சுவையான சொல் விளையாட்டுக்கள் | 19-00 |
| ஆங்கிலப் பழமொழிகள்-தமிழில் விளக்கம் | 30-00 |
| அறிஞர்களின் அனுபவ மொழிகள் | 8-00 |
| இரசிக்கத் தகுந்த கேலிகளும் கிண்டல்களும் | 18-00 |
| உலகப் புகழ்பெற்ற சொற்பொழிவுகள் | 25-00 |
| ஆத்தியும், கொன்றையும் அவற்றுக்கேற்ற குறளும் | 21-00 |
| பிறவிப் பயன்பெறச் சான்றோர் வாக்கு | 20-00 |

## விருதுகள்

| | |
|---|---|
| நோபல் பரிசு-விளக்கங்களும் விவரங்களும் | 16-00 |
| பாரத ரத்னா விருது பெற்றவர்களும் அவர்களது சாதனைகளும் | 13-00 |
| மத்திய, மாநில, தனியார் விருதுகளும் பெறுவதற்கான விதிமுறைகளும் | 9-50 |

# விற்பனையாகின்றன!

## பாரம்பரியக் கதைகள்

| | |
|---|---|
| மதனகாமராசன் கதைகள் | 39-00 |
| தேசிங்குராஜன் கதை | 16-00 |
| அல்லி அரசாணி கதை | 18-00 |
| சிந்துபாதின் கதை | 17-00 |
| அபிமன்யு-சுந்தரி கதை | 6-50 |
| சிகண்டியின் கதை | 12-00 |
| மதுரை வீரன் கதை | 15-00 |
| நள-தமயந்தி கதை | 13-00 |
| விக்கிரமாதித்தன் கதை | 65-00 |
| காத்தவராயன் கதை | 15-00 |
| பவளக்கொடி கதை | 13-50 |
| ஆரவல்லி சூரவல்லி கதை | 9-50 |
| அலிபாபாவும் நாற்பது திருடர்களும் | 11-50 |
| அலாவுத்தீனும் அற்புத விளக்கும் | 22-00 |
| மரியாதைராமன் கதைகள் பாகம் 1 | 15-50 |
| பாகம் 2 | 19-00 |

## நீதிக் கதைகள்

| | |
|---|---|
| ஈசாப் நீதிக் கதைகள் | 44-00 |
| சத்தியவான் சாவித்திரி | 12-00 |
| நல்லதங்காள் கதை | 15-00 |
| அரிச்சந்திரன் கதை | 23-00 |
| புகழ்பெற்ற பஞ்சதந்திரக் கதைகள் | 47-0 |
| சின்னஞ் சிறிய போதனைக் கதைகள் | 18-00 |
| அறிவுரை கூறும் அற்புதக் கதைகள் | 14-50 |

# யானைகளைப்பற்றிய விந்தியாசமான செய்திகள்...

★ மணிலா மிருகக்காட்சிச் சாலையில் இருக்கும் தெரசா எனப்படும் பெண் யானையிடம் ஒருபழக்கம்உண்டு.

அதன் பற்களை அதன் பாகன் தினமும் பிரஷால் சுத்தம் செய்யாவிட்டால் அது தன் இரையைத் தின்னுவதே இல்லையாம்!

★ சர்க்கஸ் நிகழ்ச்சிகளுக்கு உலகிலேயே புகழ்பெற்றவர்கள் ரஷ்ய நாட்டினர், அவர்கள் புதிது புதிதாகப்பல விதமானவேடிக்கை நிகழ்ச்சிகளை அமைத்துப்புரட்சி செய்பவர்கள்.

தற்போது சர்க்கஸில் நீர்யானையைப் பயன்படுத்திப் புதுமையான நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

★ பொதுவாகக் குழந்தைகள் குரங்குப் பொம்மைகளையும், பறவைப் பொம்மைகளையும், கார், ரயில் பொம்மைகளையும் வைத்துத்தான் விளையாடுவார்கள்.

ஆனால் லண்டனைச் சேர்ந்த மூன்று வயதான வில்சனின் விளையாட்டுக்குத் துணையாய் இருப்பது மூன்று டன் எடை கொண்ட பிர்மா என்னும் யானைதான். அவன் வெளியே எங்கு சென்றாலும் அவன் அதை அழைத்துச் செல்வான். அதற்கு உடற்பயிற்சி சொல்லித் தருவதும் இவனே!

அவன் தந்தை ஜெஃப் பில்லி சுமார்ட் சர்க்கஸில் மிருகங்களை பழக்குபவர். அவர் மகன் தந்தைக்கேற்ற மகனாய் வளர்ந்து வருகிறான்.

★ ஆப்பிரிக்க யானைகள், தண்ணீர்வற்றிய காலங்களில் தமது தந்தத்தாலேயே ஆழக் குழிதோண்டி நீரெடுக்கும் ஆற்றல் பெற்றவையாம்!

★ நான்கு கால் மிருகங்களுள்ளே அதிகக் காலம் கர்ப்பமாய் இருந்து பிரசவிப்பது, யானைதான். அது 22 மாதங்கள் அல்லது அதற்கு மேலுங்கூடக் கர்ப்பமாய் இருந்து பிரசவிக்கும்.

★ யானைக்குட்டி, பிறக்கும் போதே 2½ முதல் 3 அடி உயரமுள்ளதாயும், 200 பவுண்டு எடை கொண்டதாயும் இருக்கும்.

★ நிலத்தில் வாழும் உயிரினங்களுள்ளே நன்றாகவும் விரைவாகவும் நீந்தக்கூடியது யானை மட்டுமே.

★ சீனாவில் 'டான்சின்' பகுதியில் பூமிக்கடியில் ராட்சச யானைத் தந்தம் கிடைத்துள்ளது. அந்தத் தந்தம் ஏறத்தாழ ஏழு அடி நீளம் வாய்ந்தது. ஒரு கோடி 80 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யானையின் தந்தமாய் அது இருக்கக்கூடும் என்று புராதன ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

★ மலைமேல் ஏற வேண்டுமென்றால்கூட யானை தயங்காது. தன் பெரிய உடலைத் தூக்கிக்கொண்டு 'டங்...டங்'கென்று ஏறிவிடும்.

★ வயதான சில ஆண் யானைக்கு மதம் பிடிக்கும்.

★ யானைக்கு மூளை, அதன் உடலில் 600 இல் ஒரு பகுதிதான்!

★ மண்ணில் வாழும் உயிரினங்களுள் மிகப்பெரிய மிருக இனம், யானை மட்டுந்தான். இதில் இருவகை உண்டு-ஒன்று, ஆப்பிரிக்க யானை; மற்றொன்று இந்திய யானை.

ஆப்பிரிக்க யானை $11\frac{1}{2}$ அடி உயரமுள்ளதாயும் 6 டன் எடையுள்ளதாயும் இருக்கும்.

ஆப்பிரிக்க யானையின் பின்னங்கால்களில் மூன்று குளம்புகள் காணப்படுகின்றன. இவை பெரிய எலும்புக் கூடுகளை உடையன.

ஆப்பிரிக்கயானையின்காதுகளும், தந்தங்களும்பெரியன வாய் இருக்கும்.

ஆண் யானைகளும் பெண் யானைகளும் கூட்டமாய் வாழும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் வயது முதிர்ந்த பெண் யானை ஒன்று தலைமை தாங்கும்.

★ யானை, தன் தோலைக் காக்க சேற்றில் விழுந்து புரளுகிறது.

தண்ணீர் கிடைக்காத நேரங்களில் யானை மண்ணில் புரண்டு எழுகின்றது. தூசியிலும் யானை குளிக்குமாம்.

★ பர்மாவில் வெள்ளை யானைகளைத் தெய்வமாகவே வணங்குகிறார்கள்.

பர்மாவின் கடைசி மன்னனாய் இருந்த திபா ஒரு வெள்ளை யானையை வைத்திருந்தானாம். அதற்கு அவன் ராஜமரியாதை கொடுத்திருக்கிறான்.

அந்த யானைக்கென்று ஒரு தனி அரண்மனை ஒதுக்கப் பட்டது. அதைக் காவல் காக்க நூறு காவலர்கள் நியமிக்கப் பட்டார்கள். அவ்வப்போது அதற்குத் தேவையானவற்றை அளிக்க முப்பது வேலையாள்கள் உள்ளனர்கள். சந்தனத் தைலம் கலந்த மண நீரில்தான். அதைக் குளிப்பாட்டு வார்கள்.

அது குளிக்கும்போது நடனப் பெண்கள் நடனமாடுவார்களாம்; இசைக் கலைஞர்கள் பாடுவார்களாம்.

இப்படித் திபா மன்னன் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, பிரிட்டிஷார் அவனைப் பிடிக்க முயன்றனர். அப்போது அவன் தலைமறைவானான்.

ஆனால் அதற்குமுன் அவன் அந்த வெள்ளையானையை ரங்கூன் மிருகக்காட்சிச் சாலைக்குத் தக்க பாதுகாப்போடு அனுப்பிவிட்டானாம்.

அரண்மனையில் எந்தவிதக் குறைவும் இல்லாது ஆனந்தமாய் வாழ்ந்த அந்த வெள்ளை யானைக்கு, மற்ற யானைகளின் வாழ்வோடு வாழும்முறை ஏற்றதாய் அமையவில்லை. அதனால் வெள்ளை யானை வெகு விரைவிலேயே இறந்து விட்டதாம்.

★ நன்கு வளர்ந்த யானை ஒரு நாளைக்குச் சுமார் 150 லிட்டர் தண்ணீர் குடிக்கும்.

★ மெக்ஸிகோவைச் சேர்ந்த விவசாயப் பெண் ஒருத்தியிடம் ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மிகப் பெரிய யானையினமான மம்மோத்தின் எலும்பு உள்ளது.

இவள் வீட்டிற்கு எதிரே இவளின் மூன்று மகன்களும் குழி தோண்டியபோது இந்த யானை எலும்பு கிடைத்தது. அது கிடைத்தவுடனேயே இந்தப் பெண்மணி மெக்ஸிகோ தேசிய ஆராய்ச்சி நிலையத்தோடு தொடர்பு கொண்டாள். அவர்கள் அந்த எலும்பைப் பற்றி ஆராய்ந்துவிட்டு அது பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யானையின் எலும்பு என்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

★ பேரூர்க் கோயிலிலிருந்த யானை ஒன்றுக்கு மாதம் இருமுறை பன்னிரண்டு ரூபாய் எடையுள்ள பெருங்காயத்தை ஜீரணத்திற்காகக் கொடுப்பார்களாம்.

★ யானையின் வயதை அதன் காது, நகம் ஆகியவற்றைக்கொண்டுதான் அறிவார்கள்.

★ யானை நல்ல வெயில் நேரத்திலும் நடு இரவிலுந்தான் உறங்கும்.

★ யானைக்குட்டிக்கு அதன் தாய் மட்டுமன்றி பால் சுரக்கும் எல்லா யானைகளுமே அன்போடு பால் கொடுக்கும்.

★ பிறந்து ஏழு மாதங்கள் ஆன குட்டி, புல் மேயத் தொடங்கும்.

★ யானை எப்போதும் தண்ணீர் பருகாது. காலையிலும் மாலையிலும் மட்டுமே தண்ணீர் பருகும்.

★ யானை குளிக்கும் காட்சி மிக அற்புதமாய் இருக்கும் என்பார்கள். ஜம்போ என்று குறிப்பிடும் யானைக் குளியல் நடந்த இடம், கொழும்பு. ஸ்ரீலங்காவில் உள்ள புத்தர் கோயில் பண்டிகை ஒன்றில் சுமார் 100 யானைகள் ஊர்வலமாய் விடப்படும். ஊர்வலத்திற்கு முன்பாக அந்த யானைகளை நன்றாகத் தண்ணீரில் குளிப்பாட்டுவார்கள். அந்த யானைக் குளியலைப் பார்க்கத் திரளாக மக்கள் கூடுவார்களாம்.

★ ஜெருசலேம் நகரில் பைபிளிகல் மிருகக்காட்சிச் சாலை உள்ளது. அந்த மிருகக்காட்சிச் சாலைக்கு ஒரு குட்டியானையைக் கொண்டு வந்தார்கள். பிறந்து நான்கே நாள்களான அந்தக் குட்டியை அதன் தாய் ஏற்க மறுத்து உதைத்து தள்ளிவிடவே அதை அங்கே கொண்டு வந்தார்கள்.

குழந்தை உணவுத்தயாரிப்பாளர் ஒருவர் அந்தயானைக் குட்டிக்குத் தேவையான 12 முதல் 15 லிட்டர் வரையிலான

பேபி புட் என்னும் குழந்தை உணவை வழங்கியுள்ளார். அந்தக் குட்டியானை பிழைப்பது அரிது என்கிறார்கள்.

★ யானை இரண்டு காலால் நடப்பதைப் பார்த்திருக்கிறோம்; பெரிய மரத்தைத் தூக்குவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், ஒரு யானை ஓவியம் வரைவதைப் பார்த்திருக்கிறீர்களா?

ஆமாம், கமலா என்ற அந்த யானை வரைந்த ஓவியங்களை ஆல் பெர்ட்டாவில் கால் காரி மிருகக்காட்சிச் சாலை அருகே உள்ள கலைக் கூடத்தில் மக்களின் பார்வைக்கு வைத்துள்ளனர். இந்த யானை தன் தும்பிக்கையில் பிரஷைப் பிடித்துக்கொண்டு ஓவியம் வரைந்திருக்கிறது. பெர்ட்டா என்னும் ஊர் கனடாவில் இருக்கிறது.

★ ஒருமுறை திருச்சூரில் யானைகளின் அணிவகுப்பு ஒன்று நடந்தது. அந்த அணிவகுப்பு விழாவிற்கு விற்பனையாளர்கள் மர யானைகளைக் கொண்டுவந்து வைத்திருந்தார்கள். அவற்றுள் ஒரு யானைப் பொம்மையை அணிவகுப்புக்கு வந்த யானை ஒன்று தனது தும்பிக்கையால் தொட்டுப் பார்த்து, அது மர யானை என்பதை அறிந்த பின் அதைப் போட்டுவிட்டுப் போனதாம்!

★ ஆறு டன் எடையுள்ள யானை தினமும் 300 பவுண்டு தீனியைத் தின்னும். 50 காலன் தண்ணீரைக் குடிக்கும்.

★ ஒவ்வொரு நாட்டிலும் சுற்றுலா வரும் மக்களைக் கவர ஏதாவது ஒருவகையில் அரசு புதுமைகளைச் செய்யும்.

அட்லாண்டா அரசு ஒரு புதுமை செய்தது. அதாவது யானை உருவில் ஒரு உணவு விடுதியைக் கட்டியுள்ளது.

இந்த யானை 65 அடி உயரமும், 38 அடி நீளமும் உள்ளது. அந்த யானையின் கால்கள் ஒவ்வொன்றும் 10 அடி சுற்றளவு கொண்டது. அதன் துதிக்கை வழியாக படிகள் வளைந்து செல்லும் வயிற்றுப் பகுதியில் உள்ள இரு தளங்களில் சாப்பிட மேசை நாற்காலிகள் இடப்பட்டுள்ளன.

★ யானைகளுக்கு எப்படிப் பிரசவம் நிகழ்கிறது? பெண்களுக்கு மருத்துவமனைகளில் எப்படி எச்சரிக்கையுடனும், பாதுகாப்புடனும் மருத்துவர்களும், செவிலியர்களும் பிரசவம் பார்க்கிறார்களோ, அதே போன்றுதான் மிருகக் காட்சிச் சாலையிலும் கர்ப்பமுற்ற யானைகளுக்குப்பிரசவம் பார்க்கப்படுகிறது.

நெதர்லாந்தில் உள்ள பிச்டார்ப் மிருகக்காட்சிச் சாலையில் அப்படி நிகழவில்லை. திடீரென்று யானைகளே ஒன்று சேர்ந்து, பிரசவிக்கவிருந்த கருவுற்ற யானை ஒன்றுக்குப் பிரசவம் பார்த்தன. அது மட்டுமன்று; மற்ற யானைகள் சேர்ந்து, பிறந்த குட்டியைத் தூக்கி நிறுத்தி, நடக்கவும் பழக்கின. இந்தச்சம்பவமும் அங்குள்ள அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

★ சர்க்கஸில் சாகசம் செய்யும் யானைகள் பெரும்பாலும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவையே.

★ நைல் நதியின் கரையோரத்தில் புல்வெளிப் பகுதியுள்ளது. அப்பகுதியில் யானைக் கூட்டத்தின் ஆதிக்கந்தான் அதிகமாய் இருக்குமாம். அங்கு நூறு, இருநூறு என்று யானைகள் கூட்டமாய் மேயுமாம், திரியுமாம்!

★ நீரில் படுத்திருக்கும் ஆண் நீர் யானை எழுந்து நின்றால், உடனே அருகில் இருக்கும் பெண் நீர் யானை எழுந்து நின்றுவிடும் பண்புடையது.

★ நம் நாட்டில் யானைகளைப் பாதுகாக்கப் படாத பாடுபட்டு வருகிறோம். சிலர் யானைகளைத் தெய்வ மாகவே வழிபட்டும் வருகிறார்கள்.

வனவிலங்குப் பாதுகாப்பு வாரங்கூட நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஜிம்பாப்வே நாட்டில், யானைகளைக் கொல்லும்படி அரசே உத்தரவு பிறப்பித்து உள்ளது. காரணம் அங்கு யானைகளின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாய்ப் பெருகி வருவதுதான்.

ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் நாற்பது யானை களையாவது கொல்லவேண்டும் என்று ஜிம்பாப்வே அரசு அறிவித்துள்ளதாம்.

உலகத்திலேயே யானைகளைக் கொல்லச் சொல்லும் நாடு அதுவாகத்தான் இருக்கும்.

★ யானை தினமும் இரண்டு மணி நேரந்தான் தூங்கும்.

★ தந்தம் இல்லாத யானைகளின் எண்ணிக்கை அதிக மாகிக்கொண்டே வருகிறது.

★ யானையை, முதன் முதலாக இங்கிலாந்து நாட்டு மக்கள், மூன்றாம் ஹென்றி காலத்தில்தான் பார்த்தனர். 'ஜம்போ' என்ற அந்த யானை பிரான்சு நாட்டு மன்னரால் பரிசுப் பொருளாகக் கொடுக்கப்பட்டதாம்.

★ பருவம் அடைந்த ஆண் யானைக்கு ஒவ்வொரு வருடமும் மதம் பிடிக்கும்; பெண் யானைக்கு மதம் பிடிக் காது. அதனால்தான் சர்க்கஸ் கம்பெனிகளில் பெரும் பாலும் பெண் யானைகளையே பயன்படுத்துகிறார்கள்.

★ 1805 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நியூயார்க்கிலுள்ள சோமார்ஸ் என்னும் இடத்தில் முதன் முதலாக சர்க்கஸ் நடத்தப்பட்டது.

உலகிலேயே சர்க்கஸ் ஒன்றில் மிருகங்கள் அறிமுகப் படுத்தப்பட்டதும் இந்த இடத்தில்தான். 'ஒல்ட் மெட்' என்ற யானை இந்த சர்க்கஸில் தோன்றி, உலகிலேயே சர்க்கஸில் தோன்றிய முதல் மிருகம் என்ற பெருமையையும் பெற்றது.

இந்த யானையைச் சிறப்பு செய்யும் வகையில், அமெரிக்காவில் முதல் சர்க்கஸ் நடத்தப்பட்ட இடமான சோமார்ஸில் ஒரு சிலையை நிறுவியிருக்கிறார்கள்.

★ இந்தியாவில் மொத்தம் 11 யானைச் சரணாலயங்கள் உள்ளன. யானைகளின் எண்ணிக்கை 18 ஆயிரம் முதல் 24 ஆயிரம் வரை இருக்கலாம் என்று கணக்கிட்டுள்ளனர். நீலகிரி கிழக்குச் சரணாலயத்தில் மட்டும் 5,000 யானைகள் உள்ளன. ஆனைமலை— பரம்பிக்குளம் சரணாலயத்தில் 1,200 யானைகள் உள்ளன.

★ நமது நாட்டு யானை ஒன்று லண்டன் மிருகக் காட்சிச் சாலையில் இருக்கிறது அதன் பெயர் 'லியான்ஜ் லியான்ஜ்' என்பதாகும்.

அதைப் பராமரிப்பதற்கென்றே சிறப்புப் பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அந்த யானையும் அவரும் இப்போது நல்ல நண்பர்கள்.

அந்தப் பணியாளருடன் அந்த யானை விளையாடுவதைப் பொதுமக்கள் சுற்றுலாப் பயணிகள் அதிசயமாய்ப் பார்த்து இரசிக்கிறார்கள்.

இந்த யானையின் காதிலும், தலையிலும், துதிக்கையிலும் இந்தியத் கோலங்களை இவர் தீட்டிவிடுவது தனிச் சிறப்பாகும்.

★ யானைக்குட்டி பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் எழுந்து நடக்கத் தொடங்கிவிடும். அது சுமார் நான்கு மாதம்வரை பால் குடிக்கும்.

★ யானை ஒரே இடத்தில் 8 மணி நேரங்கூட நிற்கும்.

★ 'மனிதர்களையும் வாகனங்களையும்தான் என்னால் கட்டுப்படுத்த முடியும். கூட்டமாக மிருகங்கள் இப்படி குறுக்கே வந்தால் என்னால் என்ன செய்ய முடியும்' என்று அமெரிக்காவிலுள்ள லாக்பி தெருவைச் சேர்ந்த போக்கு வரத்துக் காவலர் இப்படிப் புலம்பினார். ஏன்?

மிகப் பெரிய சர்க்கஸ் கம்பெனி ஒன்றன் ஆரம்ப விழாவின்போது முப்பது யானைகள் சாலையை அடைத்து அணிவகுத்து வந்தன. அந்த அணி வகுப்பை மக்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். வேறு வழியின்றி யானைகளுக்கு வழிவிட்டு காவலர் ஓரம் நின்றுபார்க்கத் தொடங்கி விட்டார்.

★ நீர்யானை முழு வேகத்தில் ஓடினால் மனிதனைவிட இதனால் வேகமாய் ஓட முடியும்.

★ ஒரு பெண் யானை, தன் வாழ்நாளில் ஆறு குட்டிகளை ஈனுகிறது.

★ இந்திய யானைகளுக்கும், ஆப்பிரிக்க யானைகளுக்கும் இடையே ஒரு வேறுபாடு உண்டு. இந்திய யானைகள் பக்கவாட்டில் கால்களை நீட்டிக் கொண்டு படுத்துத் தூங்கும்; ஆப்பிரிக்க யானைகளோ நின்றபடியே தூங்கும்.

★ 'ஒயிட் எலிபெண்ட்டு' என்றால் வெள்ளை யானை என்றுதானே பொருள்? ஆனால், அமெரிக்காவில் இதன்

பொருளே வேறு. அங்கு மிகுந்த கஷ்டத்தில் —குறிப்பாகப் பணக் கஷ்டத்தில் இருப்பவர்கள் தங்கள் நிலையை இவ் வார்த்தையைக் குறிப்பிட்டுக் கூறுகிறார்கள். இதற்கு ஒரு சுவையான கதை உண்டு.

அமெரிக்காவில் பி.டி. பார்ணம் என்ற உலகப் புகழ் பெற்ற சர்க்கஸ்காரர் இருந்தார். இவர் பெருமளவிற்குப் பணம் கொடுத்து ஒரு வெள்ளை யானை வாங்கினார்,

அந்த யானையை வாங்கியபின் அவருக்குப் பணக் கஷ்டம் மிகுதியாக ஏற்படலாயிற்று. பின், மிகுந்த சிரமப் பட்டு அந்த யானையை விற்றதால் அவருக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

★ முதன் முதலாக பெண்மணி ஒருவர் யானைப் பாக ராக ஆகியுள்ளார். அவர் பெயர் காளியம்மாள்.

கோவைக்கு அருகில் கோளா எல்லையில் 'டாப்சிலிப், என்னும் இடத்தில் யானைகளின் சரணாலயம் உள்ளது. 54 வயதாகும் 'பாண்டியன்' என்னும் யானையை முதலில் பொம்மன் என்பவர் கவனித்து வந்தார்.

அந்த யானைக்குப் பழம், தேங்காய், வெள்ளரிக்காய் ஆகியவற்றைக் கொடுத்த காளியம்மாளுக்கு நாளடைவில் அந்த யானையுடன் நன்கு பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அந்த யானை காளியம்மாள் சொல்லும் வேலைகளை செய்து வருகிறது. மரங்களை இழுத்து விடுவது, தடிகளை அடுக்குவது போன்ற பணிகளை அந்த யானை செய்து வருகிறது.

★ யானை மனிதனைவிட அதிக வேகமாய் மணிக்குச் சுமார் இருபது மைல் வேகத்தில் நடக்கும்.

★ அசாமிலுள்ள யானைகளுக்குக் கோபம் ஏற்பட்டு விட்டால் கூட்டம் கூட்டமாய் விமான நிலையத்திற்குச் சென்று விமானங்கள் கிளம்புவதைத் தடை செய்யுமாம்.

★ ஒரே இடத்தில் மொத்தமாய் 107 யானைகளைப் பார்க்க முடியுமா? முடியும் என்பதுபோலக் கேரளாவில் ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது.

கேரளாவிலுள்ள திருச்சூரில் சுற்றுலா பயணிகளைக் கவரும் நோக்கத்தோடு கேரள அரசு ஒரு கஜமேளை நடத்தியது. இந்த கஜமேளையில் 107 யானைகள் ஒரே வரிசையில் முனிசிபல் மைதானத்தில் அணிவகுத்தது இதுவே முதல் முறையாகும்.

1991ஆம் ஆண்டில் இங்கு இந்த 107யானைகளும் நெற்றிப் பட்டம் ஏந்தி முத்துக் குடைகளுடன் 'ஜல்ஜல்' என்ற சலங்கை ஒலியுடன் துதிக்கைகளை அசைத்துப் பயணிகளை வரவேற்றது. கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இப்படி 107 யானைகள் ஒரே இடத்தில் கூடியிருந்தும் சிறு அசம்பாவிதமும் நிகழாதது மேலும் ஓர் ஆச்சரியப்படத் தக்க விசயமாகும்.

★ யானையின் துதிக்கையில் நான்கு இலட்சம் தசைகள் உள்ளன. துதிக்கையில் சிறு எலும்புகூட இல்லை.

★ பெண் யானையைத் தமிழில் 'பிடி' என்பர்.

★ குதிரைப் பந்தயம் மாட்டுப் பந்தயம் நடைபெறுவதைக் கேள்விப்பட்டிருப்போம். யானைகள் ஓட்டப் பந்தயம் நடைபெறுவதைக் கேட்டதுண்டா?

கேரளாவில், திருச்சூர் மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு உலகின் முதன் முதலாக யானைகள் மராத்தன் ஓட்டம் நடைபெற்றது.

இந்த அரிய நிகழ்ச்சியை இரு பிரெஞ்சு நிறுவனங்கள் இந்திய மற்றும் கேரள சுற்றுலா வளர்ச்சி வாரியங்களுடன் இணைந்து நடத்தின.

★ யானையின் பாலில்தான் அதிக அளவு சர்க்கரைச் சத்துள்ளது, தாய்ப்பாலிலும் வேறு எந்த மிருகத்தின் பாலிலும் இந்த அளவு சர்க்கரை இருப்பதில்லை.

★ மக்னா என்பது தந்தமில்லாத யானை இனத்தைக் குறிக்கும்.

★ பாங்காக்கில்—தாய்லாந்தில்—மரக்கடை ஒன்றில் ஒற்றைக்கண் யானை ஒன்றை வேலைக்கு அமர்த்தி இருந்தார்கள். ஒரு நாள் அந்த யானைக்கு கோபம் ஏற்படவே அது தன் துதிக்கையால் யானைப் பாகனைத் தூக்கி எறிந்து தந்தத்தால் குத்திக் கொன்றது. பிறகு தன் தவற்றை உணர்ந்த அந்த யானை தன் மிகப்பெரிய காலால் பள்ளம் தோண்டி, அதற்குள் அவனை அடக்கம் செய்துவிட்டு அழ ஆரம்பித்தது.

இந்த நிகழ்ச்சி 1980ஆம் ஆண்டில் நடைபெற்றது.

★ யானையின் உறவு விலங்குகள் மாமதங்கள் என்பவையாகும். இவை இப்போது இல்லை. முற்காலத்தில் வாழ்ந்த இவை காலப்போக்கில் அழிந்துவிட்டன. இவற்றின் பாசில்கள் சோவியத் யூனியனில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. சாதாரண யானைகள் போல் அல்லாது இவற்றிற்கு அடர்த்தியான முடிகள் இருக்குமாம்.

★ யானைக்கு மொத்தமே நான்கே பற்கள்தாம்.

★ ஆப்பிரிக்காவில் போங்கோலோ என்னும் காட்டில் வசிக்கும் யானைகள், 'உம்கானா' என வழங்கப்படும் மரத்தைத் தேடி அடிக்கடி கூட்டமாய்க் கிளம்பிவிடுமாம்.

அந்த மரத்தின் பழங்கள் யானைகளுக்கு போதையை தருகின்றனவாம். யானைக்கும் போதை என்றால் விருப்பம் போலும்.

★ இந்திய யானைகளைக் காப்பதற்காகவும், அவற்றைப் பாதுகாக்கும் அவசியத்தைப்பற்றி பிரச்சாரம் செய்வதற்காகவும் இந்தியாவில் இரு அமைப்புகள் உள்ளன. அவை ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் செயல்படும் சங்கங்களுடன் சேர்ந்து 'கஜ ரக்ஷா' என்கிற திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இந்த அமைப்பு யானைகளை அடிமைப்படுத்துதல், வேட்டையாடுதல் ஆகியவற்றை தடுப்பது; யானைகள் வாழும் சூழல் உணவு ஆகியவை பாதிக்கப்படாமல் காப்பது முதலியவை குறித்து தீவிரப் பிரச்சாரங்கள் செய்து வருகின்றன.

★ உணர்ச்சி வசப்படும் போது மனிதனைப்போல் கண்ணீர் விடும் ஒரே விலங்கினம், யானை மட்டுமே.

★ 'யானை நாடு' என்று எதை வழங்குகிறார்கள்? சயாம் (தாய்லாந்து).

★ இயற்கைத் தந்தத்திற்கு நீரை உறிஞ்சும் தன்மை உண்டு. ஆப்பிரிக்க நாடுகளில் தந்தத்திற்காக யானைகளைக் கொல்லும் நிகழ்ச்சி சர்வ சாதாரணமாக இருக்கிறது.

★ காட்டு யானை தற்செயலாகவோ சண்டையிலோ மற்றொரு மிருகத்தைக் கொல்ல நேரிட்டால், உடனே ஆற்றில் சென்று குளித்துவிட்டுத்தான் உணவு உட்கொள்ளுமாம்.

★ பால் வேறுபாடு இன்றி வயது வேறுபாடு இன்றி எல்லாருக்கும் யானையைப் பிடிக்கும்.

சிலர் விதவிதமான யானைப் பொம்மைகளை வீட்டில் வைத்து அழகு பார்ப்பார்கள்.

யானை மீது கொண்டுள்ள விருப்பத்தால் ஆதம்பாக்கத்தில் ஒருவர் செய்துள்ள காரியம் இது.

இவர் தம் வீட்டின் இரண்டாவது மாடியில் ஆறரை அடி உயரம் உள்ள ஒரு யானையையே நிற்க வைத்து விட்டார். எப்படி?

இள வயது முதலே யானை மீது விருப்ப முள்ள இவர் தம் வீட்டு மாடியில் ஒன்பது மூட்டை சிமெண்ட்டு நாலாயிரம் சதுர ஓடு அரை லாரி மணல், அடைடன் கம்பி ஆகியவற்றை வாங்கி ஒரு யானைச் சிலையை அமைத்து விட்டார்.

இது வெறும் சிலைமட்டுமன்று; தண்ணீர் தொட்டியும் கூட.

இந்த யானையை மாலையோடு அமைத்திருக்கிறார்· காரணம் ஆதம்பாக்கத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள இராஜராஜேஸ்வரி கோயிலின் மேல் இராஜேஸ்வரி சிலை உள்ளது.

இந்த யானைச் சிலைக்கு அருகில் இருந்து பார்த்தால் அந்த இராஜேஸ்வரி சிலைக்கு யானை மாலை போடுவது போலத் தோன்றும்.

இன்னும் ஒரு வியப்பு என்னவென்றால், ஒரு முறை இவர் வீட்டு வழியே வந்த யானை ஒன்று இவர் வீட்டு வாயிலில் நின்று பிளிறத் தொடங்கிவிட்டது.

யானைப் பாகன் அந்த வீட்டின் மீது இருப்பது வெறும் 'சிலை'தான் என்று உணர்த்தி சமாதானப்படுத்திய பிறகுதான் அங்கிருந்து அந்த யானை நகர்ந்து சென்றதாம்.

இந்த 'யானை' தண்ணீர்த் தொட்டி இருநூறு லிட்டர் தண்ணீர் கொள்ளக்கூடியதாம். பின்காலின் இடப்புறவழியாகத்தான் தண்ணீர் யானையின் வயிற்றுப் பகுதிக்குப் போகுமாம். வலக்காலின் வழியாகத்தான் தணணீர் வெளியேறுமாம்!

இந்தத் தண்ணீர்த் தொட்டியைச் சுத்தம் செய்ய யானை முதுகில் அமைக்கப்பட்டுள்ள 'சிலாப்' வழியாக உள்ளே இறங்க வழி இருக்கிறது.

அந்த யானைத் தொட்டியை அமைக்கக் கூலி ஆயிரத்து எண்ணூறு ரூபாய் ஆனதாம். கட்டி முடிக்க பதினைந்து நாட்கள் ஆயினவாம்.

★ பெரிய மிருகமான யானை மிகச்சிறிய சுண்டெலியைக் கண்டு பயப்படும் என்று சொல்கிறார்களே, அது உண்மையா அன்று.

சிறிய சுண்டெலி யானையின் துதிக்கையில் புகுந்து மூச்சு விடாமல் செய்துவிடும் என்று நம்புகிறார்கள்.

உண்மை என்னவென்றால், யானை சுண்டெலியைக் கண்டு பயப்படுவதே அல்லை. யானை படுத்திருக்கும் போது சில வேளைகளில் அதன் வால் பக்கம் கால் பக்கம் சுண்டெலி ஓடக்கூடும் யானைக்கு நுண்ணிய நுகர்வுணர்வு

இருப்பதால் சுண்டெலி தன் அருகில் இருப்பதை அறிந்து விடும்; எனினும், அது சுண்டெலியைப் பற்றி பொருட் படுத்துவதே இல்லை. யானை கொஞ்சம் வேகமாய் மூச்சை இழுத்துவிட்டால் சுண்டெலி பல அடி தூரத்தில் போய்விழும்.

சில விலங்குகள்பற்றி இதுபோலக் கொண்டுள்ள தவறான கருத்துகள் நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு அறிவியலில் ஆதாரம் ஏதும் இல்லை.

★ எழுபது, எண்பது கிலோ எடையுள்ள உடலைக் கொண்ட நாம், கண்விழிக்கச் சிரமப்படுகிறோம்.

மிகுந்த அளவு எடையுள்ள உடம்பைக் கொண்டுள்ள யானை இரண்டு அல்லது மூன்று மணிநேரம் மட்டுமே தூங்குகிறது. பெரும்பாலும் நின்றுகொண்டே தூங்கும்.

★ ஆண்டுதோறும் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஜெய்ப்பூரில் ஹோலிப் பண்டிகையை முன்னிட்டு யானைத் திருவிழா நடைபெறுகிறது.

ஜெய்ப்பூர் சாகன் அரங்கில் நடைபெறும் இவ்விழா வில், அழகாக அலங்கரிக்கப்பட்ட யானைகள் அணி வகுத்துச் சென்று பார்வையாளர்களுக்குத் தங்கள் துதிக் கைகள் மூலம் 'சல்யூட்' அடிக்கின்றன.

நன்றாக அலங்கரிக்கப்பட்ட இந்த யானைகளுள் ஒன்றுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. - உலகிலேயே

யானைகள் ஓட்டப் பந்தயம் நடைபெறுவதும் இந்த விழா வில் தான்.

யானைகள்மீது அமர்ந்து போலோ விளையாடும் நிகழ்ச்சியும் இந்த விழாவில் நடைபெறுகிறது.

★ பாற்கடலில் பிறந்த ஐராவதத்திற்கு வெள்ளை யானை என்பது பெயர் ஆங்கிலத்தில் பெருந்தீனி தின்ப வரையும் 'வெள்ளை யானை' என்று வழங்குவார்கள்.

★ மைசூரில் தசரா பண்டிகை மிக விமரிசையாகக் கொண்டாடப்படும். அந்த விழாவின்போது யானை களை மிகவும் நேர்த்தியாக அலங்கரிப்பது வழக்கம். இவ் வாறு பல ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது.

முதலில், யானைகளை சோப்புத் தேய்த்துக் குளிப் பாட்டுவார்கள். பிறகு வண்ண சாக்பீஸ்கள் இலைகளின் சாறு ஆகியவற்றைப் பயன்படுத்தி அவற்றின் மீது ஓவியர் கள் வண்ணச் சித்திரங்களைத் தீட்டுவார்கள். அவற் றுக்கு விலை உயர்ந்த ஆடை அணிமணிகளையும் அணிவிப்பார்கள்.

★ இந்திய யானை படுத்துப் புரள்வதுண்டு. ஆனால் ஆப்பிரிக்க யானை படுப்பது இல்லை. நின்றுகொண்டே தூங்கும்.

★ பண்டையகால இந்தியர்கள், உலகத்தை நான்கு யானைகள் தங்கள் முதுகில் சுமந்துகொண்டுள்ளன என்றும், அவை கடலில் நீந்திக்கொண்டிருக்கும் மிகப்பெரிய ஆமையின் முதுகில் நின்று கொண்டுள்ளன என்றும் நம்பினர்.

மற்றுமொரு நம்பிக்கை உண்டு உலகம் பன்னிரண்டு தூண்களின் மீது உள்ளது. இரவில் அத்தூண்களுக்கு

இடையே செல்லும் சூரியன் அத்தூண்களை இடித்து விடாமல் செல்ல வேண்டும் அப்படி இடித்துவிட்டால் உலகம் விழுந்து அழிந்துவிடும்.

★ 1987ஆம் ஆண்டில் கௌமார மடாலய மகாசந்நிதானம் தவத்திரு சுந்தரசுவாமிகள் 108 கஜ பூஜையை நடத்திக் காட்டியுள்ளார்"

கோயம்புத்தூருக்குத் தெற்கே ஏழு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது சரவணம்பட்டி. அங்குதான் கௌமார மடம் இருக்கிறது. இது, நூறு ஆண்டுகால வரலாறு கொண்ட மடம். தவத்திரு சுந்தரசுவாமிகள் இதன் மூன்றாவது மகாசந்நிதானம்.

இந்த மடம் பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தண்டபாணி சுவாமிக்கும். அவிநாசியப்பருக்கும். கருணாம்பிகை அம்மனுக்கும், வரசித்தி கணபதிக்கும் தனித்தனி கோயில்கள் அங்கு உள்ளன. கஜபூஜை நடத்துவதற்குப் போதிய இடவசதி இருந்தது.

இங்கே உலக அமைதிக்காக 108 கஜபூஜையோடு உலகப் பெரு வேள்வியும் (மகாயக்ஞம்) நடத்தப் பெற்றது.

அசைந்து கொண்டு வரும் 108 யானைகளை அழைத்து வருவதில் இவர்களுக்கு எந்தவிதச் சிரமமும் இருக்கவில்லை.

கேரளத்தில் யானை அதிபர்கள் சங்கம் வைத்துச் செயல்படுகிறார்கள். அவர்களோடு தொடர்பு கொண்டார்கள்.

ஒரு யானை. இந்த கஜ பூஜையில் கலந்துகொண்டு திரும்புவதற்கு கட்டணமாக ரூபாய் ஏழாயிரம் கொடுக்கப்

பட்டது குடிநீரும், தீனியும் லாரிகளில் தொடர, யானை கள் நடைப்பயணம் மேற்கொண்டு கோவை வந்து சேர்ந்தன. குட்டி யானைகள் மட்டும் லாரிகளில் சவாரி செய்தன.

முகபடாம் கொண்ட யானைகளை வரிசையாக நிறுத்தினர். ஒவ்வொரு யானைக்கு முன்னும் வேதிகை, வேள்வி ஆகியன அமைக்கப்பட்டன. யானைகளுக்கு மகாகணபதி ஆவாஹனம் செய்து அவற்றைத் தெய்வ மாகக் கருதி பூஜை செய்தார்கள்.

யானையின் தும்பிக்கை அளவு தூரத்தில் இருந்து இந்தக் கஜ பூஜையில் கலந்துகொள்ள ரூபாய் பத்தாயிரம் ஐயாயிரம், ஆயிரம் செலுத்திப் பலர் டிக்கெட் வாங்கி இருந்தார்கள். டிக்கெட் வாங்காதவர்கள், தொலைவி லிருந்து பங்கு கொண்டார்கள்.

இந்தக் கஜ பூஜை இவ்வாறு மேளதாளத்தோடு நடந்தது.

சுமார் நானூறு சிவாச்சாரியார்கள் இந்தக் கஜ பூஜை யில் கலந்துகொண்டு இந்தப் பூஜையை நடத்தி வைத்தார்கள்.

மொத்தம் இருபது லட்சம் ரூபாயில் இந்த கஜபூஜை நடந்தேறியது. கௌமார மடமே தந்த கணக்கு இது.

யானைக்கு வெள்ளை நிறம் பிடிக்காது.

★ 1982 ஆம் ஆண்டில் டில்லியில் நடந்த ஆசிய விளை யாட்டுப் போட்டியின் சின்னம் யானைக்குட்டியாகும்.

இதற்காக உண்மையிலேயே ஒரு யானைக்குட்டிக்குப் பயிற்சி தரப்பட்டது. அது, ஆசிய விளையாட்டுப்

போட்டி தொடக்கவிழாவில் கலந்துகொண்டு இரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த 'அப்பு' யானைக்குட்டியின் வயது 11 மாதங்களே அருணாசலப் பிரதேசக் காட்டில் தாயிடமிருந்து இதைக் கொண்டு வர 20 பேர் தேவைப்பட்டனர்.

'அப்புக்'குட்டியை லாரியில் கொண்டுவரும்போது அதன் தாய் நான்கு மைல் தூரம் அந்த லாரியைத் துரத்தி வந்தது.

கான்பூர் சர்க்கஸ் கம்பெனியில் பயிற்சிபெற்று வந்த போது அப்புவுக்கு தினசரி ஐஸ், சர்க்கரை, நெய்; மாவு முதலியன கலந்த உணவு கொடுத்தார்கள். அப்பு தினமும் குளித்தது கங்கையில்தான். அப்புவிற்கு யோகந்தான்.

★ ஆட்டுச் சந்தை, மாட்டுச் சந்தை இருப்பதுபோல பீகாரில் யானைச் சந்தை இருக்கிறது.

இங்கிருந்துதான் பல சர்க்கஸ் கம்பெனிகளுக்கு யானைகள் வாங்கப்பட்டனவாம்.

★ வனவிலங்குச் சரணாலயம் ஒன்றை ஜெர்மனியில் உள்ள ஹாம்பர்க் நகரில் ஹெகன்பெக் என்பவர் நடத்தி வருகிறார். இது இவரால் நடத்தப்படும் தனியார் சரணாலயமாகும்.

இங்கு 14 யானைகள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டு மட்டுமே ஆண்; பன்னிரண்டு பெண் யானைகள்.

பெரும்பாலானவை இந்திய யானைகளே. இங்கே உசேன் என்னும் யானை வந்த புதிதில் பெண் யானைகள் அதைக் கண்டு ஒதுங்கி ஓடினவாம்.

உசேன், பொறுமை மிக்கது. அந்தப் பொறுமையே பல பெண் யானைகளை ஈர்த்தது.

அதன் விளைவாக 5 பெண் யானைகள் 1995 ஆம் ஆண்டு டிசம்பரில் குட்டிப் போட்டன.

இன்னும் ஆறு யானைகள் உசேனுக்காகக் காத்திருக்கின்றனவாம்.

பொதுவாக, பெண் யானைகளின் நெருக்கம் கிடைக்கா விடில் பாகனை ஆண் யானை கொன்றுவிடும்.

உசேன் வித்தியாசமானது. எப்போதும் அமைதியாய் இருக்கும். அதன் வயது 20. இதற்கு முன்பு பிரான்சில் 50 வயதான யானை 11குட்டிகள்போட்டது. இதுதான்உலகில் அதிகக் குட்டி போட்ட யானை. இதை விரைவில் உசேன் முறியடித்து விடும் என்கிறார் ஹேகன்பெக் மைய நிபுணர் கார்ல் காக்.

உசேனுக்கு அடுத்து உள்ள ஒரே ஆண் யானை, மேக்னம் சாமுண்டி. அதற்கு வயது, மூன்று. அதன் தாய் யசோதா. இந்திய யானைகள் அனைத்திற்கும் இந்தியப் புராணப் பெயர்தான்.

இந்த 14 யானைகளை வைத்து 'மனிதனும் யானை களும்' என்னும் பெயரில் கண்காட்சி ஒன்று கடந்த ஆண்டு நடந்தது!

★ திருநெல்வேலியிலிருந்து சுமார் பதினைந்து மைல் தொலைவில் பத்தமடை கிராமம் உள்ளது. அதற்கு மிக அருகில் 'கரிசூழ்ந்த மங்கலம்' என்னும் எழில்மிகு கிராமம் உள்ளது.

இவ்வூருக்கு இப்பெயர் எப்படி ஏற்பட்டது? பாண்டிய மன்னன் காலத்தில், யானைப் படையின் ஒரு பகுதி, நீர்

வளம், நிலவளம் கருதி இவ்வூரில் வைக்கப்பட்டதாம். இங்குக் கரும்புத் தோட்டங்கள் ஏராளமாய் இருந்தன. இங்கு யானைகள் கூட்டம் கூட்டமாய்த் திரிந்து வந்ததால் 'கரிசூழ்ந்த மங்கலம்' என்னும் பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டதாம். கரி என்பதற்கு யானை என்பது பொருள்.

★ யானையின் சராசரி ஆயுள் காலம் 40 ஆண்டுகள் தாம். ஆனால் சில யானைகள் அதிகபட்சமாய் 70 ஆண்டு கள்வரை உயிர் வாழ்கின்றன.

கருநாடகக்காடுகளில் இப்போது சுமார் ஐந்தாயிரம் யானைகள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது.

இந்த யானைகள் வயல்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றனவாம். இதனால் யானைகளுக்குஎப்படிக் கருத்தடை செய்வது என்று கருநாடக அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

★ யானைக்குத் தும்பிக்கை இருப்பது ஏன் என்னும் ஒரு வினாவை எழுப்பினால் எழுப்பினால் பல விடைகள் கிடைக்கும்.

தரைவாழ் பாலூட்டிகளுள் மிகப் பெரிய வனவிலங்கு யானை.

மூக்கும், மேலுதடும் சேர்ந்து நீண்ட குழாய் போன்று அமைந்துள்ள உறுப்பே, யானையின் துதிக்கையாகும். இதனைத் 'தும்பிக்கை' என்றும் கூறுவர்?

யானையின் உடல் மிகப் பெரியதாய் இருப்பதால், அதனால் எளிதாக வளையவோ, குனியவோ, திரும்பவோ முடிவதில்லை. எனவே யானை நின்றபடியே தரையிலுள்ள

உணவை எடுப்பதற்கும், நீரை உறிஞ்சி வாயில் தள்ளு வதற்கும் துதிக்கை பயன்படுகிறது.

யானையின் பரிணாம வளர்ச்சியில் ஏறத்தாழ 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் துதிக்கை என்னும் அதிசய உறுப்பு வளர்ந்திருக்கிறது.

யானைகளின் மூதாதைகள் பெரிய பன்றிகளைப் போலவே இருந்தன. அவற்றிற்குத் துதிக்கை இல்லை. பரிணாம வளர்ச்சியில் அவற்றின் வழி வந்த யானைகள் பெரியனவாய் வளர்ந்ததால் நீண்டு தடித்த கால்கள் உண்டாயின; பற்கள் பெரிய தந்தங்களாய் மாறின. உடல் உருவத்திற்கேற்பத் தலையும் மிகப் பெரிய தாய் மாறிற்று. கனத்த தலையைக் கொண்டு கீழே குனிய முடியாதென்பதால் நீண்ட துதிக்கை இன்றியமையாததா யிற்று.

யானை தனது நீண்ட துதிக்கையினால் இலை, தழை, கிளை முதலியவற்றை வளைத்துப் பிடித்து வாயினுள் இடவும், நீரை உறிஞ்சி உடல்மீது தெளித்துக்கொள்ள வும் தூவிக்கொள்ளவும் முடிகிறது.

துதிக்கை மிகவும் நுட்பம் வாய்ந்த உறுப்பு. இதனைப் பயன்படுத்தி மிகச்சிறிய பட்டாணியளவு உள்ள பொருள் களையும் யானையால் பொறுக்கி எடுக்க முடியும். இது திறம் மிக்க முகரும் உறுப்பாகவும் பயன்படுகிறது.

★ ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச நகைக் கண் காட்சிக்காக, இலங்கையிலிருந்து தங்கம், வைரம் முதலிய நவரத்தினங்களால் செய்யப்பட்ட ஒரு யானை கொண்டு வரப்பட்டது. இதன் விலை முப்பது இலட்சம் இதைச் செய்தவர், சாந்தி விமலரத்னே என்பவர்.

★ தாய்லாந்து நாட்டில் வெண்ணிற யானைகளை மிகவும் போற்றுகின்றனர். உண்மையில் அவை நம் நாட்டு யானைகள் மாதிரிதான் உள்ளன.

அவற்றின் தோலில் சாயத்தன்மை குறைவாக இருக்கிறது. பாண்டு நோய்க்கு உட்பட்டதால் அவை நிறம் வெளிறி வெள்ளை யானைகளாகக் காட்சியளிக்கின்றன; அவ்வளவுதான்!

★ ஆப்பிரிக்காவில் உள்ள யானைகளுள் சில கறுப்பு தந்தம் உடையனவாம்.

★ பீகார் மாநிலத்திலுள்ளசோனேபூரில் யானைச்சந்தை நடைபெறுகிறது ஆண் யானைகளுக்குத் தந்தம் இருப்பதால் அவைகளின் விலை அதிகம்.

★ டெங்கினிக் கோட்டை அருகே அடர்ந்தகாட்டுப்பகுதி இருக்கிறது. இது தர்மபுரி மாவட்டத்திலுள்ளது.

இங்குள்ள மூங்கில் காடுகளில் ஏராளமான யானைகள் மூங்கில் தின்ன வருவது உண்டு.

மூங்கில் மரங்களுக்கு மேலே மின்சாரக்கம்பிசெல்கிறது. இங்கு வந்த யானை தின்பதற்காக மூங்கில் மரத்தைப் பிடித்து வளைத்தது.

அப்போது மரத்தின் மேலே சென்ற மின்சாரக்கம்பியில் உள்ள மின்சாரம் தாக்கி யானை செத்தது.

அதைக் காப்பாற்ற வேறு இரு யானைகள் முயன்றன. அவைமீதும் மின்சாரம் தாக்கியது. அதனால் மூன்று யானைகளும் பரிதாபமாய் இறந்துவிட்டன.

★ ஆசிய யானைக்குத் தும்பிக்கை நுனியின் மேற்புறத்தில் விரல்போல் செயல்படும் சிறிய அமைப்பு இருக்கிறது. அதைக்கொண்டு, கீழே கிடக்கும் சின்னஞ்சிறு இறகைக் கூட யானையால் எளிதாய் எடுக்கமுடியும்.

இதுபோல் ஆப்பிரிக்க யானைக்கு மேலும் கீழுமாய் இரு விரல் அமைப்புகள் உள்ளன.

★ யானைக்குத் தும்பிக்கைதான் முக்கிய உறுப்பு. அதை நீட்டி இலைகளைப் பறிக்கிறது. உணவுப் பொருள்களைத் தும்பிக்கையின் கீழ்ப்பகுதியால் சுருட்டி கெட்டியாகப் பிடித்தவாறு கொண்டு சென்று வாயினுள்ளே தள்ளுகிறது. அதன் உணவுத் தேவை அதிகம் என்பதால், அது ஒருநாளின் 24மணி நேரத்தில் 18 மணி நேரத்தைச் சாப்பிடுவதிலேயே செலவிடுகிறது.

★ யானை தும்பிக்கையால் ஓங்கி ஓர் அடி அடித்தால், மிகுந்த வலிமை நிறைந்த சிங்கங்கூடச்செத்துவிடும். எலும்பில்லாத கைக்கு அந்த அளவுக்கு வலிமை உண்டு.

★ யானைக்குடும்பம் ஒவ்வொன்றிலும் பன்னிரண்டுக்கு மேற்பட்ட யானைகள் உண்டு. பாட்டி, மகள்கள், பேத்திகள் எனப் பெண் யானைகள் அதிகம். குட்டிகளுள்ஆண்கள் இருக்கலாம். மற்றபடி வயதுவந்த ஆண் யானைக்குக் குடும்பத்தில் ஆண் யானை இல்லை. அவற்றின் வாழ்க்கை முறை பெண் தலைமையை அடிப்படையாகக் கொண்டது.

★ ஆப்பிரிக்க யானைகளுள் ஆண், பெண்ஆகிய இரண்டுக்குமே அழகிய தந்தம் உண்டு. இதனால் ஆப்பிரிக்கக் காடுகளில் வேட்டையாடச் சென்றவர்கள் யானைக்கூட்டத்திற்கு ஒரு பெரிய ஆண் யானைதான் தலைவனாகச்செயல்படுகிறது என்று கூறினார்கள். அதனால் பல ஆண்டுகளாக மக்கள் அதை நம்பி வந்தார்கள்.

சமீப காலத்தில்தான் ஆப்பிரிக்க யானைகளுக்குத் தலைமை வகிப்பது ஆண் யானை அன்று; பெண் யானை என்னும் உண்மை தெரிய வந்திருக்கிறது.

★ யானையின் உடலில் எந்தப் பகுதியில் காயம் ஏற்பட்டாலும் அதனால் உயிர் வாழமுடியும். ஆனால் தும்பிக்கையில் மட்டும் காயம் ஏற்பட்டால் அது உயிர் இழக்க நேரிடும்.

ஏன்? தும்பிக்கையில் காயம் ஏற்பட்டால், அதனால் தும்பிக்கையைப் பயன்படுத்த முடியாது. எனவே அது மண்டியிட்டு வாய் வைத்துத்தான் தண்ணீரைக் குடிக்கவும், புல்லைத் தின்னவும் வேண்டியதிருக்கும். இது முடிகிற காரியமா?

★ யானை தும்பிக்கையின் நுனியை மூடிக்கொண்டு நீரை வாய்க்குள் இரைக்கிறது. தினசரி சுமார் 135 லிட்டர் முதல் 225 லிட்டர் வரை உள்ள தண்ணீரை யானை குடிக்கிறது.

★ யானைத் தோலின் கனம் 2 செ.மீ. அதைச் சுத்தமாய் வைத்திருக்க யானை தினமும் குளிக்க வேண்டியிருக்கிறது.

★ யானை நீந்தும்போது, தும்பிக்கையை மட்டும் தண்ணீருக்கு மேல் தூக்கி வைத்துக்கொள்கிறது.

★ யானைக்கு நுகர்வு சக்தி அதிகம். தும்பிக்கையின் நுனியில் உள்ள மூக்குத் துவாரத்தின் மூலம் 3கி.மீ. தொலைவிலுள்ள பொருள்களின் வாசனையைக்கூட அறிந்துகொள்ளும் ஆற்றல் அதற்கு உண்டு.

★ மனிதர்கள் சந்தித்துக்கொண்டால் கைகுலுக்கிக் கொள்வர்.

அதுபோல, ஒரு யானைக்குடும்பம் இன்னொரு குடும்பத்தைக் கடந்து செல்ல நேர்ந்தால், அவ்விரு குடும்பத்து யானைகளும் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்ளத் தவறா.

★ மனித உடலில் 15 வயது முதல் 25 வயதுக்குள் எலும்பின் வளர்ச்சி நின்றுவிடுகிறது. இப்படி நின்றுவிட்டால் உடல் வளர்ச்சியும் நின்றுவிடுகிறது.

ஆனால் யானையைப் பொறுத்தவரை அதன் இறுதி மூச்சு உள்ளவரை வளர்ச்சிதொடர்ந்து நிகழ்ந்துகொண்டே இருக்கும். அதாவது யானை எவ்வளவு பெரிதாய் இருக்கிறதோ அந்த அளவுக்கு அது கிழடாகியுள்ளது என்பது பொருள்.

★ ஆசிய யானை நடந்து செல்லும்போது, அதன் தலை சற்றுக் குனிந்திருக்கும்; ஆனால் ஆப்பிரிக்க யானையின் தலை அவ்வாறு குனிந்திருக்காது.

★ ஆசிய யானையின் முதுகில் கூன் உண்டு; ஆனால் ஆப்பிரிக்க யானைக்கு முதுகின் பின்புறத்தில் சற்றே குழி ஏற்பட்டிருக்கும்.

★ ஆசியப் பெண் யானையின் தந்தம் மிகச்சிறியது; வாய்க்கு வெளியே நீண்டு வளராது. ஆனால் ஆப்பிரிக்கப் பெண் யானையின் தந்தம் ஆண் யானைக்கு உள்ளது போல் வெளியே நீண்டிருக்கும்.

★ ஆசிய யானையைவிட ஆப்பிரிக்க யானை உருவத்தில் பெரியது.

ஆண் யானைக் குட்டிக்கு 12 வயதில் வாலிபப் பருவம் தொடங்குகிறது. அப்போது அது குடும்பத்திலிருந்து வெளியேற்றப்படுகிறது. எனினும் அந்த வாலிபக்குட்டி

குடும்பத்திற்குச் சற்றுத்தள்ளி மேயும். அதைச் சில காலம் வரை தாய் அனுமதிக்கிறது. அப்புறம் ஆண்குட்டி தனியே போய்விடுகிறது. வாய்ப்புக் கிடைத்தால், ஆண்யானைக் கூட்டத்தில் சேர்ந்து கொள்கிறது.

பொதுவாக இப்படிக் கூட்டமாய் வாழ்ந்தாலும் பெண் யானைக் கூட்டம்போல் அவை ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்வதில்லை. பொதுவாக ஆண் யானைக்குத் தனித்த வாழ்க்கைதான்.

✶ யானைகளுக்கு அறிவுக்கூர்மை அதிகம். பல ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீர் குடித்த ஏரி, மேய்ந்த புல்வெளி ஆகியவற்றையும் அவற்றால் நினைவுகூர முடியுமாம்!

யானை எப்போதும் தன் காதை அசைத்துக்கொண்டிருக்கும். அதற்குக் காரணம், அதன் காதில் ஏராளமான இரத்த நாளங்கள் இருப்பதால், அவற்றை அசைத்து மூளைக்குச் செல்லும் இரத்தத்தைக் குளிர்ச்சியாக்கி அனுப்புகிறது.

✶ யானை குளித்தவுடன் தன் உடம்பின்மீது மண்ணை வாரிபோடும். அதற்குக் காரணம், அது தம் உடம்பிலிருந்து வெளியாகும் வெப்பத்தைக் குறைப்பதற்காகவேயாகும்.

✶ தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணிநேரம் வேலை செய்யவேண்டும் என்பது சட்டம். பிராணிகளுக்கு அப்படிச் சட்டம் இருக்கிறதா என்றால் இருக்கிறது என்று கர்நாடக அரசு சொல்கிறது.

இந்த மாநிலத்தில் உள்ள காட்டு இலாகா யானைகள் ஒரு நாளைக்கு நான்கு மணிநேரமே வேலை செய்கின்றன.

ஒரு வருடத்தில் மூன்று மாத காலம் அவற்றுக்கு ஓய்வு அளிக்கவேண்டும் எனச்சட்டத்தில் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவில் இமயமலை அடிவாரம், அஸ்ஸாம், உத்தரப்பிரதேசம், நீலகிரி, மைசூர், குடகு, கேரளம் முதலிய இடங்களில் யானைகள் அதிகமாய் வாழ்கின்றன.

இலங்கையின் வடபகுதியைச் சார்ந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவகை யானைகள் உருவத்தில் சிறியன. இவற்றுக்குத் தந்தம் இல்லை.

★ மூங்கில் நிறைந்த அடர்ந்த காடுகளிலும், பெரிய மரங்கள் வளர்ந்துள்ள மலைப்பிரதேசக் காடுகளிலும் யானைகள் கூட்டம் கூட்டமாய் வாழ்கின்றன.

★ இந்திய யானைகள் கனிகள், கிழங்குவகைகள், மரப் பட்டைகள், சிறிய செடிகள், புல் முதலியவற்றை உண்ணும். மூங்கில் குருத்து யானையின் விருப்பமான உணவு. மற்றும் ஆல இலை, அரச இலை, பலா இலை, தென்னங்குருத்து, பனங்குருத்து ஆகியவற்றை ஆவலுடன் தின்னும்.

★ யானைகள் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து இரை தேடக் கிளம்புகின்றன. காலை ஒன்பது மணிக்குப் பிறகு யானைகளால் சூரிய வெப்பத்தைத் தாங்கமுடியாது.

காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை வெயிலில் மேயாமல் மரநிழலில் இளைப்பாறும்.

★ யானையின் துதிக்கை சுமார் ஆறு அடி நீளம் இருக்கும். இதன் எடை முந்நூறு பவுண்டாகும்.

சதையால் ஆன இத்துதிக்கையால் நன்றாய் வளர்ந்த புலியைக்கூடத் தூக்கி எறிந்து பந்தாடிவிடும் ஆற்றல் யானைக்கு உண்டு.

புலிக்கும் யானைக்கும் இடையே சண்டை நடந்தால் யானையே வெற்றி பெறும்.

★ பண்டைய காலத்தில் எகிப்து மக்கள் சிங்கத்தைப் புனிதம் வாய்ந்த விலங்காகக் கருதினார்.

★ ஆப்பிரிக்க ஆண் யானையின் இடதுப்பக்கத் தந்தம் வலதுப்பக்கத்துத் தந்தத்தைவிடக் குட்டையாய் இருக்கும். ஏன் இப்படி? வலதுப்பக்கத்துத் தந்தத்தைக் குழிபறிக்கப் பயன்படுத்துவதனால் இது தேய்ந்து குட்டையாகிவிடும்.

★ தன் கண்களுக்கு இடையில் கைக்கு மாறாக ஒரு பாம்பை வைத்திருக்கிறது என்று யானையின் நீண்ட தும்பிக்கையைப்பற்றி, கி.மு.50 ஆம் ஆண்டில் வாழ்ந்த புகழ் பெற்ற ரோமாபுரிக் கவிஞர் ஒருவர் குறிப்பிட்டார்.

தும்பிக்கையில் எலும்பே இல்லை. ஆனால், மூக்கின் மேல் உதடும் இணைந்து நீண்டு தும்பிக்கையாகியிருக்கிறது. இதுவே இதன் கையாகும்.

★ யானைகள் தங்களுக்கிடையே இரகசிய மொழி ஒன்றில் பேசிக்கொள்கின்றன இவ்வாறு பேசுவது மனிதர்களுக்குக் கேட்காது. அவ்வளவு குறைந்த ஒலியில் அவை பேசிக்கொள்கின்றன என்று, அமெரிக்காவில் உள்ள கார்னல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

★ அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவதுபோல வனத்துறையைச் சார்ந்த யானைகளுக்கும் ஓய்வு ஊதியம் அளிக்

கப்படுகிறது. என்பது பலருக்கு வியப்பாய் இருக்கும் ஆனால், உண்மை!

வனத்துறை யானைகளை அறுபது ஆண்டுகளுக்கு வேலைகளில் பயன்படுத்துவர். அதற்குப்பின் இறக்கும் வரை அவற்றிற்கு ஓய்வு ஊதியத்தின் மூலம் வழக்கம் போல உணவுகள் கொடுத்துக் கவனிப்பார்கள்.

கண்ணன், கணேசன், ஸ்ரீதேவி என்று யானைப்பாகன் தன் இஷ்டம் போல பெயர்சூட்டி அவற்றை அழைக்க முடியாது.

நீண்ட யோசனைக்குப் பிறகே அரசு யானைகளுக்குப் பெயர் சூட்டுகிறது.

தலைவர்கள் பெயர்கள் மட்டுமல்லாது விளையாட்டு வீரர்களின் பெயர்கள்கூட யானைகளுக்குச் சூட்டப்படு கின்றன.

எடுத்துக்காட்டாக, இந்திரா காந்தி கபில்தேவ் பெயரில் வனத்துறை முகாமில் யானைகள் உள்ளன.

ஒரு யானைக்குப் பாகர் இருவர் உள்ளனர். அவர் களுள் ஒருவர் யானையைக் குளிப்பாட்டுதல், இரைபோடு தல் போன்ற வேலைகளைக் கவனிப்பார்.

யானைக்குட்டி தினம் தாயிடம் பதினைந்து லிட்டர் பால் குடிக்கும். ஆறுமாதத்திற்குள் தாயிடமிருந்து குட்டியைப் பிரித்துவிடவேண்டும். இல்லை என்றால், குட்டி அடங்காத யானையாக வளரத் தொடங்கிவிடும்.

யானைப்பாகன் காலையிலும் மாலையிலும் யானை யின் தந்தத்திலும் கால் பாதங்களில் வேப்ப எண்ணெயைத்

தடவுவான்; காரணம் அங்கு புழு கிருமிகள் இருந்தால் இறந்துவிடும்.

நாற்பத்தைந்திலிருந்து எழுபத்தைந்து கிலோ வரை யானைத்தந்தத்தின் எடை இருக்கும். ஒரு கிலோ தந்தத்தின் மதிப்பு இரண்டு ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகும்.

இதனால்தான் யானைகள் கடத்தல்காரர்களால் சுட்டு வீழ்த்தப்படுகின்றன.

கோவிலில் வளர்க்க முடியாத யானைகள் வனத்துறை முகாமிற்கு அனுப்பப்படுகின்றன.

ஆண்யானை உடலுறவின் போது பெண் யானைக்குச் சத்தியம் செய்து கொடுத்துப் பள்ளத்தில் இறக்கிவிடும்

ஏற்றிவிடும் என்று கூறப்படுகின்ற கதைகளெல்லாம் தவறானவையாகும்.

மற்ற விலங்குகளைப் போலத்தான் யானைகளும் நடந்துகொள்ளும்.

நிறைமாதக் கர்ப்பிணியாய் இருக்கும் பெண்யானையை இருபத்து நான்குமணி நேரமும் யானைப்பாகன் கவனித்துக்கொள்வான். காட்டில் பெண் யானையைச் சுற்றி மற்ற யானைகள் கூடி நின்று பிரசவம் பார்க்கும்.

★ யானைக்குப் பார்வை சற்றுக் குறைவு. ஐம்பது அடி தூரத்திலிருக்கும் பொருளைக்கூட யானையால் பார்த்து அறிய முடியாது ஆனால் அதற்கு மிகுதியான மோப்பசக்தி உண்டு.

★ யானை அதன் எஜமானரிடம் விசுவாசமாக இருக்கும்.

★ சோவியத் யூனியனிலுள்ள யரவானில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் யானை ஒன்று இருக்கிறது. அது ஜெர்மன் ஆங்கிலம், ருசியம், ஆர்மேனியம் ஆகிய நான்கு மொழிகளை அறிந்திருக்கிறது.

இது முதலில் ஜெர்மனியிலுள்ள லெப்சிக் மிருகக் காட்சிச் சாலையிலும், பின் லண்டனிலும் இருந்தது. அதன் பின் மாஸ்கோவிலிருந்து யரவானுக்கு அனுப்பப்பட்டது.

இதனால் மேற்சொன்ன நான்கு மொழிகளுள் எந்த மொழியில் கட்டளை இட்டாலும் அது புரிந்துகொண்டு செவ்வனே செயலாற்றுகிறது.

★ யானையால் மானைப்போலவோ, ஆட்டைப் போலவே எம்பிக்குதிக்க முடியாது. விலங்கு இனத்தில் யானையால் மட்டுந்தான் இப்படிச் செய்யமுடியாது.

★ மூக்கால் தண்ணீரை மொண்டு வாய்க்குள் செலுத்தித் தண்ணீர் குடிக்கும் ஒரே விலங்கு யானைதான்!

வறட்சிக் காலத்தில், ஆற்றுப்படுகையில் அல்லது ஏரி ஓரத்தில் முன்னங்கால்களினால் யானை நிலத்தைத் தோண்டும். அப்போது சுரக்கும் நீரைக் குடிக்க யானைக் குட்டிகள், 'நான் முந்தி, நீ முந்தி' என்று முன்னால் வரும்.

ஆனால், தாய் யானையும் மற்ற பெரிய யானைகளும் அவற்றைப் பின்னுக்குத் தள்ளிவிடும்.

குடும்பத்தலைவிதான் முதலில் தண்ணீர் குடிக்கும். அதற்குப் பிறகுகூட எந்த யானையும் தண்ணீர்குடித்துவிட

முடியாது. அதிகார வரிசைப்படி ஒவ்வொன்றாகத் தண்ணீர் குடிக்கும்.

கடைசியில்தான் குட்டிகள் குடிக்க வேண்டும்.

★ யானைகளுக்குத் தமிழ் இலக்கியத்திலும் சமயத்திலும் பெரும் மதிப்பு உண்டு.

இந்திய அரசர்களிடம் இருந்த நால்வகைப் படைகளுள் யானைப்படையும் ஒன்று.

★ இந்திய யானைகளின் சராசரி உயரம் 9 அடி முதல் 10 அடிவரை இருக்கும்.

★ யானை மட்டுமே நான்கு கால்களாலும் முட்டிப் போடக் கூடிய மிருகம் ஆகும்.

★ நமது நாட்டில் முதியோர்களுக்கும் அநாதைக் குழந்தைகளுக்கும் விடுதி இருப்பதைப் போல இலங்கையிலுள்ள கொழும்பு நகரத்திற்கு அருகே யானைக் குட்டிகளுக்காக ஓர் அநாதை இல்லம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் இங்கே தாயை இழந்த யானைக்குட்டிகளையும், வழி தவறி வந்த யானைக்குட்டிகளையும் வைத்துப் பாதுகாக்கிறார்கள். அவற்றை வளர்க்கும் பொறுப்பை ஒரு தாய் யானை கவனித்துக்கொள்கிறது.

★ (யானைகள் மனிதர்களைவிட அதிகப் பாசம் கொண்டவையாய் இருக்கின்றன.)

சென்னை குழந்தைகள் பூங்காவில் நடந்த சம்பவம் அதை உறுதிப்படுத்துவதாய் உள்ளது.

தன் குழந்தைகள்மீது அளவு கடந்த பாசம் கொண்ட அலமேலு என்னும் யானைக்கு முதலில் ஒரு சப்பாணிக் குழந்தை பிறந்தது.

ஊனமுற்ற குழந்தை என்பதால் அதனைக் கிண்டி சிறுவர் பூங்கா நிருவாகத்தினர் அதன் தாயின் காலடியி லேயே தவழ்ந்து வர அனுமதித்தனர். மூன்றாண்டு காலம் வாழ்வைத் தாக்குப்பிடித்த சப்பாணிக் குட்டி இறந்து விட்டது.

அலமேலு யானை அழுது பிளறியது. தன் குட்டியைப் புதைத்த இடத்தில் அடிக்கடி சென்று அது வேதனையோடு நின்றது.

கணவன் நஞ்சன், நிலையைச் சீராக்கியது.

அடுத்து அலமேலு யானை கார்த்திக் என்னும் குட்டியை ஈன்றது. கார்த்திக் அழகாய் இருந்தது. அதனால் அலமேலுவுக்கு ஒரே மகிழ்ச்சி முதல் குழந்தையின் பாசத் தையும் சேர்த்து இரண்டாவது குழந்தையைப் பாலூட்டி வளர்த்தது.

பதின்மூன்று மாதங்கள் வரை பூங்கா நிருவாகத்தின ரும் இந்தக் குடும்ப விசயத்தில் தலையிடவில்லை. பிறகு தான் தாங்கள் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கார்த்திக்கை அதன் தாய் அலமேலுவிடமிருந்து பிரித்தே ஆகவேண்டும் இல்லையென்றால் எதிர்காலத்தில் கார்த்திக் சண்டித்தனமானதாய் வளர்ந்து விடும் என்று கருதினார்கள்.

எப்படிப் பிரிப்பது? தாயையும் சேயையும் எளிதில் பிரிக்கமுடியவில்லை. தன் கால் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடி வரும் நிலைமைக்கு வந்து விட்டது தாய் அலமேலு!

அப்பா நஞ்சனை அணுகினார்கள், பூங்காவினர் பொறுப்புள்ள தந்தை யானை நஞ்சன் தான் உடன் சென்று

மகன் கார்த்திக்கை தாயை விட்டுப் பிரியச் செய்தது. மரக்கூண்டில் அடைக்கப்பட்ட கார்த்திக் சில நாள்கள் பிளிறிப் பிளிறி அழுதது; கூண்டிற்குள் தகராறு செய்தது.

கணவன் நஞ்சன் அருகில் இருந்ததால் சற்றுப் பயந்தது, அலமேலு. ஆனாலும் அவ்வப்போது குழப்பம் செய்தது. பின் தாய்ப் பாசம் சும்மா இருக்குமா?

அலமேலுவைச் சமாதானப்படுத்த வண்டலூர்ப் பூங்கா விலிருந்து கமலா, சுப்புலெட்சுமி என்னும் பெண் யானை கள் வந்தன. பெண்ணின் மனது பெண்ணிற்குத்தானே தெரியும்! அலமேலுவும் அமைதியானது.

இப்போது, தாய்ப்பால் மறந்த நிலையில் கார்த்திக் தினம் பதினைந்து லிட்டர் செயற்கைப் பால் குடித்து வளரத் தொடங்கிவிட்டது.

பராமரிப்பவர்கள் இடும் கட்டளைக்குப் பணிகின்றது. கூண்டிற்குள் அமைதியாக இருக்கிறது; வெளியே மகிழ்ச்சி யாய் உலா வருகிறது; தாயைக் கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து வருகிறது.

இந்த நிலையில், பெண் யானை அலமேலுவும் அதன் கணவன் நஞ்சனும் மகிழ்ச்சியாய் இருக்கின்றன.

ஆனால், குழந்தை கார்த்திக்குக்கு ஓர் ஆபத்து என் றால் தன் கால் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஆவேசமாய் ஓடோடி வருகிறது தாய் அலமேலு!

★ முதன் முதலில் சர்க்கஸில யானை பங்குகொண்டது. எங்கு, எப்போது தெரியுமா?

அமெரிக்காவில் 1805ஆம் ஆண்டில்தான் நியூயார்க்கில் உள்ள சோமார்ஸ் என்னும் இடத்தில் முதன் முதலாக சர்க்கஸ் நடத்தப்பட்டது.

உலகிலேயே சர்க்கஸ் ஒன்றில் மிருகங்கள் அறிமுகப் படுத்தப்பட்டதும் இந்த இடத்தில்தான்.

'ஒல்ட்மெட்'என்ற யானை இந்தச் சர்க்கஸில் தோன்றி உலகிலேயே சர்க்கஸில் தோன்றிய முதல் மிருகம் என்ற பெருமையைப் பெற்றது.

இந்த யானையைச் சிறப்பிக்கும் வகையில், அமெரிக் காவில் முதல் சர்க்கஸ் நடத்தப்பட்ட இடமானசோமார்ஸில் ஒரு சிலையை நிறுவியிருக்கிறார்கள்.

★ கேரளாவிலுள்ள எர்ணாகுளம் மாவட்டத்தைச் சார்ந்த கொடை நாட்டில் உள்ள சரணாலயத்தில் நடந்த சோகம் கலந்த நிகழ்ச்சி இது.

அந்த யானையின் பெயர் சீமா. அதன் கால்களில் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அதன் துதிக்கை முழுவதும் கண்ணீரால் நனைந்து போயிருந்தது.

ஏன் இந்த யானை அழுது கொண்டிருந்தது?

'பெய்லி' என்ற யானைப் பாகன் இறந்ததால்தான் அந்த யானை அழுதது.

அங்கே மான் ஒன்றைப் பெரிய சங்கிலியால் கட்டிப் போட்டிருந்தார்கள்.

ஏன் அந்த மானை இவ்வளவு பெரிய சங்கிலியால் கட்டிப் போட்டிருந்தார்கள்?

அந்த மான்தான் 'பெய்லி' என்ற அந்த யானைப் பாகனைக் கொன்று விட்டது!

பெய்லி, நூற்றுக்கு மேற்பட்ட யானைகளைப் பழக்கி யிருக்கிறார்.

ஒரு முறை புதிய யானை ஒன்றை அவர் பழக்கப் படுத்திக்கொண்டிருந்தார். அப்போது திடீரென அது பெய்லியின் உடலைத் தன் துதிக்கையால் சுற்றி வளைத்து இறுகப் பிடித்துக் கொண்டதாம்.

உடனிருந்த அவர் மனைவி மேழி, புத்திசாலித்தன மாகத்தான் உடுத்தியிருந்த ஒரே பாவாடையை அவிழ்த்துத் தீப்பற்ற வைத்து காட்டினாள். அதைப் பார்த்தவுடன்தான் யானை அவரை விட்டது.

அது மட்டுமன்றிப் பல யானைகள் தம் தந்தங்களால் பெய்லியை மிகுதியாகக் காயப்படுத்தியிருக்கின்றனவாம்.

இப்படி யானைகளிடம் இருந்தெல்லாம் தப்பி வாழ்ந்த பெய்லி, ஒரு மான் தன் கொம்பால் குத்தவே இறந்து விட்டார்.

அந்த மான், பெய்லியைக் குத்தியபோது அவர்எழுப்பிய மரணக் குரலைக் கேட்டு வந்தவர்களால் மானை ஒன்றும் செய்ய முடியவில்லையாம்!

ஆனால், சீமா என்ற யானை மட்டும் பிளிறலோடு தன் காலில் கட்டப்பட்டிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிச் சென்று, 'குட்டன்' என்ற அந்த மானைப் பிடித்துத் தூக்கி ஆற்றில் எறிந்து விட்டதாம்.

ஆற்றினுள் எறியப்பட்ட மானோ பரபரப்படையாமல் ஆற்று நீரில் நன்றாக நீந்திக் களித்துவிட்டு கரை ஏறிய தாம்.

பூங்காவில் இருப்பவர்கள் ஆச்சரியப்படத்தக்க வகை யில் சீமா யானையைப்பற்றிச் சொல்கிறார்கள்.

இப்போது பருவம் வந்த நான்கு பெண்களோடு பெய்லி யுடைய குடும்பமே நிர்க்கதியாய் இருக்கிறது.

அந்தக் குடும்பத்தின் ஒவ்வொரு குழந்தைகளோடும் சீமாவுக்குப் பல ஆண்டுகள் பாசமான உறவுண்டு.

பெய்லி தம் குடும்பத்தார்களோடு இருப்பதைக் காட்டி லும் சீமாவோடுதான் பெரும் பகுதி நேரத்தைக் கழிப் பாராம்!

அவர் சீமாவைச் சங்கிலியால் பிணைக்காமல் பகலெல் லாம் அப்படியே விட்டுவிடுவாராம். ஏனென்றால், அது அவ்வளவு பாசமாய் இருக்கும்.

ஒரு நாள், பெய்லியின் மூத்த மகள் சாந்தியை நாலைந்து ரவுடிகள் பெய்லி வீட்டிலேயே கற்பழிக்க முயன் றிருக்கிறார்கள்.

சாந்தியோ, “அம்மா! அப்பா! சீமா! அத்தை!” என்று அலறி புலம்பியிருக்கிறாள், ‘ஓ’வென்று கத்தியிருக்கிறாள். நம்ப முடியாத அளவில் படங்களில் வருவதைப் போலச் சீமா பெய்லியின் குடிசை வீட்டைச் சுற்றி சுற்றி வந்தது.

தன்னால் குடிசையின் கதவு வழியே நுழைய முடியாத தால் சீமா குடிசையை அப்படி தூக்கி எறிந்தது; பின் நிர்வாணக் கோலத்தோடு, தன் கைகளால் மானத்தை மறைத்துக் கொண்டிருந்த சாந்தியைச் சுற்றி நின்றிருந்த ரவுடிகளைத் தூக்கிப் பந்தாடியது. அதனால் ஒருவன் இறந்தான், மற்றவர்கள் நொண்டியாக அலைந்து கொண் டிருக்கிறார்கள்.

சீமாவுடைய நோக்கமெல்லாம் குட்டன் (மான்) இருக் கின்ற இடத்தை நோக்கியே எப்போதும் இருக்கிறது.

‘குட்டனைக் கொல்லாமல் நான் விடமாட்டேன்! என்பது போல் சீமா சினங்கொண்டு அலைந்து வருகிறது

பெய்லி அவ்வப்போது சீமா இறந்து போன இடத்தில் நின்று கண்ணீர் சிந்துகிறது.

பெற்ற பிள்ளைகள்கூட காலப்போக்கில் தம் தந்தையை மறந்து விடுகிறார்கள். ஆனால், பெய்லி வளர்த்த இந்த சீமாமட்டும் அவரை மறக்கவே இல்லை.

★ யானைகள் கிடைக்கும்போதே முடிந்த அளவு உணவைத் தின்றுவிடும்.

ஆண் யானை நாள் ஒன்றுக்குச் சுமார் 220 கிலோ தீனியைத் தின்னும். புல்லையே அது விரும்பித் தின்னும்.

அப்படித் தின்னும்போது சிறுசிறு கூழாங்கற்களையும் சேர்த்து அது விழுங்கிவிடும். அந்தக் கற்கள் உணவோடு கலந்து, உணவை அரைத்து ஜீரணமாக்கி வெளியே தள்ளுவதற்குப் பயன்படுகின்றன.

★ யானையிடம் இருக்கும் அபூர்வ சக்தியைப்பற்றி பெரிப்ளூஸ் பின்வருமாறு கூறியுள்ளார்:

யானையின் வால் மிகவும் சிறியதாய் இருப்பதால் பூச்சி ஈ, வண்டு ஆகியவற்றின் தொந்தரவுகளிலிருந்து அது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடிவதில்லை.

ஆனால் யானையிடம் சிறந்த ஓர் அபூர்வ ஆற்றல் இருக்கிறது. வண்டு, பூச்சிகள் ஆகியன யானையின்மீது அமர்ந்தவுடன் அது அந்த இடத்திலுள்ள தன் தோலைச் சற்றே சுருக்கிக்கொள்ளும். தோலின் மடிப்புக்குள் சிக்கி பூச்சி வண்டு ஆகியவை இறந்துவிடும்.

★ பண்டைய காலத்தில் யானைகள் போரில்பெருமளவு ஈடுபடுத்தப்பட்டன. ஈட்டிகளை எறியவும், ஆள்களைத் தூக்கி எறியவும் இவை பயன்பட்டன.

போர் யானைகள் எல்லாம் ஒன்றாகக் கூடிக் கோட்டைகளைத் தகர்த்தெறியும். இதனைத் தடுக்கவே கோட்டை மதிலைச் சுற்றி அகழிகள் அமைக்கப்பட்டன. கோட்டை கதவுகளில் கூர்மையான ஆணிகள் பதிக்கப்பட்டன.

இந்தியா வந்த சீசர் இந்த அமைப்பைப் பார்த்துத் தம் நாட்டிலும் கோட்டைகளைச் சுற்றி அகழிகள் அமைத்தார் என்று வரலாறு சொல்கிறது.

அக்கால அரசர்களின் வெற்றி தோல்வி, படையில் உள்ள யானைகளின் எண்ணிக்கை, அவற்றின் வலிமை ஆகியவற்றைப் பொறுத்தே தீர்மானிக்கப்பட்டன.

★ எவ்வளவு பெரிய யானைகளையும் சாதாரண ஒரு பன்றியின் உறுமல் ஒலி பீதி அடையச் செய்து குழப்பிவிட்டு விடும்.

ரோம் மக்கள், ஆண் பன்றியின் உறுமும் ஒலியை எழுப்பியே, தம்மீது ஏவப்பட்ட பிர்ரஸ் அரசனின் யானைப் படையைச் சிதற அடித்தார்கள் என்று வரலாறு கூறுகிறது.

தந்தங்களின் நிறத்தைப் பொறுத்தே ஒரு யானையின் வயது கணக்கிடப்படுகிறது. இளம் யானைக்கே நல்ல வெண்மையான தந்தம் இருக்கும். வயது ஆகஆகத் தந்தங்களின் வெண்மை மாறிவிடும்.

★ முற்காலத்தில் யானைகளைப் பிடிக்க வரும் குதிரை வீரர்கள் அவற்றைச் சூழ்ந்துகொண்டு ஈட்டிகளால் தாக்குவார்கள். காலில் முதலில் காயம் ஏற்படுத்தி ஓடமுடியாத படி செய்தபின் அவற்றைப் பிடித்து வந்து பழக்குவார்கள்.

யானைகளின் கால்களில் இரும்புச் சங்கிலிகளைக் கட்டி அவற்றை ஈட்டிகளாலும், அங்குசத்தாலும் குத்தி விரட்டுவார்கள்.

யானைகள் அங்குமிங்கும் ஓடும்போது அந்தச் சங்கிலி கள் உராய்ந்து இரணத்தை ஏற்படுத்தும். வலி தாங்க முடியாமல் அவை பாகனின் கட்டளைக்குக் கீழ்ப்படியும். இந்த விசயங்களைப் பழங்கால 'யானை நூல்' கூறு கிறது.

★ யானைகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மிகவும் பாதுகாப்பான இரகசியமான இடத்தில் இணை சேரும். ஐந்து அல்லது ஆறு நாள்களுக்கு ஒன்றாகவே சுற்றித்திரியும். மற்ற பூனை, நாய், சிங்கம் போன்று பெண் கொள்ளப் போராடுவது இல்லை;விரும்பியே இணை சேரும்.

★ யானைகள் வேட்டைக்காரர்களிடம் இருந்து காப் பாற்றிக்கொள்ள என்ன செய்யும்?

வேட்டைக்கு வருபவர்கள் முன்னால் குட்டையான தந்தங்களை உடைய யானைகளை மூத்த யானைகள் நிறுத்தி வைக்கும்.

அதைப் பார்த்துவிட்டு, 'இந்த யானைக் கூட்டத்திற்கு மிகச்சிறிய தந்தமே இருக்கிறது போலிருக்கிது!' என்று அவர்கள் வேட்டையாடாமல் சென்றுவிடுவார்கள்.

சில நேரங்களில் வேட்டையாடுபவர்களிடமிருந்து தப்பமுடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அப்போதுயானைகள் என்ன செய்யும்?

பக்கத்தில் உள்ள மரத்தில் மோதி தம் தந்தங்களை உடைத்துப் போட்டுவிடும். தந்தத்திற்காக அவற்றைக் கொல்ல வந்தவர்கள் அவற்றைக் கொல்லாமல் போய்விடுவார்கள்; யானைகளும் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும்.

யானை மிருக இனத்தைச் சார்ந்ததாயினும் அது தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதில் மனிதரைப் போல் தான் செயல்படுகிறது என்று கூறவேண்டும்.

மனிதர்கள் வழிப்பறிக்காரர்களிடமிருந்து தப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டால், எவ்வளவு விலை உயர்ந்த பொருள்களாய் இருந்தாலும் அவற்றை வழிப்பறிக்காரர்களிடம் கொடுத்துவிட்டுத் தங்கள் உயிரைக் காத்துக்கொள்கிறார்கள். அதைப்போல யானையும் செயல்படுகிறது அல்லவா?

★ முற்காலத்தில் யானையை, யாளி என்று தவறாகக் கருதி வந்தார்கள். ஏனென்றால் யாளிக்கும் தும்பிக்கை உண்டு. அதனால் யானையும் யாளியும் ஒன்றாகக் கருதப் பட்டன.

இந்தயாளி என்னும் சொல் இலத்தீனில் 'யாளிபோஸ்' என்றும், ஆங்கிலத்தில் 'எலிபெண்ட்' என்றும் வழங்கப் பட்டது.

இலத்தீனில் உள்ள போஸுக்கும் ஆங்கிலத்திலுள்ள எலிபெண்டுக்கும் மூலமாய் உள்ள யாளி என்பது தமிழேயாகும்.

★ யானைகளிடம் அறிவு நுட்பம் அதிகம். அவை, ஆற்றைக் கடக்கும் நிலை ஏற்படும்போது குட்டிகளையும் சிறிய யானைகளையும் முதலில் கடக்கச் செய்துவிட்டுப் பிறகேதாம் போகும்.

காரணம், பெரிய யானைகள் முதலில் சென்றால் அவற்றின் பளு தாங்காமல் பள்ளம் ஏற்படும். அதனால் குட்டிகளும் சிறிய யானைகளும் ஆற்றைக் கடக்கச் சிரமப் படுமாம். எவ்வளவு முன்யோசனையோடு யானை செயல் படுகிறது.

★ காட்டு யானைகள், காட்டை அடுத்துள்ள ஊர்களில் புகுந்து பயிர்களையும் வாழைத் தோப்புகளையும் அழிப்பது சர்வ சாதாரணம்.

பிற பிராணிகளிடமிருந்து பயிரைக் காக்க மக்கள் வேலியில் மின்சாரத்தைப் பாய்ச்சியிருப்பர். அப்பிராணிகள் பயிரைத் தின்னவந்து, மின்சாரத்தால் தாக்கப்பட்டுத் தம் உயிரை இழந்துவிடும். ஆனால், யானைகளை மின்சாரம் ஒன்றும் செய்யா. யானைத் தந்தத்தில் மின் சக்தி பாயாது. அதனால் அவை தம் தந்தத்தாலேயே வேலியை விலக்கிவிட்டு உள்ளே புகுந்து மேய்ந்துவிட்டுப் போய்விடும்.

★ யானை உண்ட உணவு ஜீரணமாக இரு நாள்கள் ஆகும்.

★ ஆப்பிரிக்கா கண்டத்தில் மட்டும் காணப்படும்யானை கள் அழிந்து கொண்டிருக்கின்றனவாம். முன்பு ஒருமுறை கணக்கெடுத்தபோது அந்த யானைகளின் எண்ணிக்கை 15 இலட்சம் இருந்ததாம். இப்போது கணக்கெடுத்தபோது அது 7 இலட்சமாய்க் குறைந்துவிட்டதாம்.

யானைத் தந்தத்திற்காக இந்த யானைகள் இனத்தை மனித இனம் அழித்துக்கொண்டிருக்கிறது. 1970ஆம் ஆண்டில் ஒரு கிலோ யானைத் தந்தத்தின் விலை ஐந்து டாலர். 1985ல் இதன் மதிப்பு 147 டாலர். இப்போதைய விலை 300 டாலர்களுக்கு மேல் ஆகிறது.

இந்த விலை உயர்வுதான் யானையின் எண்ணிக்கைக் குறைவுக்குக் காரணமாகும்.

★ தான்சானியா நாட்டில் யானைகள் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டில் ஏராளமாய்ப் பெருகியுள்ளன.

உலகின் மிகப்பெரிய வனவிலங்குப் பூங்காவான செலவ்ஸில் முன்பு முப்பதாயிரமாய் இருந்த யானைகளின் எண்ணிக்கை ஐந்து ஆண்டில் ஐம்பத்து இரண்டாயிரமாய் உயர்ந்துள்ளது. தந்த வேட்டைக்காரர்கள் கையில் சிக்காமல் யானைகளைக் காத்து வளர்த்தால் அவை எப்படி எல்லாம் பெருகும் என்பதையே இந்தக் கணக்கு காட்டுகிறது.

★ ஓர் ஆண் யானை, பெண் யானையுடன் உடல் உறவு கொள்ள விரும்பினால், அது முதலில் அதற்குரிய செயல்பாடுகளில் ஈடுபடத் தொடங்குகிறது.

ஆண் யானை, பெண் யானைக் குடும்பத்தைத் தேடிச் சென்று அதனைப் பின் தொடரும். அந்தக் குடும்பத்தில் தன் விருப்பத்திற்கு இணங்கக்கூடிய யானை எது என்று முதலில் நோட்டம் பார்க்கும்.

ஏதேனும் ஒரு பெண் யானை இணங்குமாயின் அதனை நெருங்கும். பின் தன் துதிக்கையைத் தூக்கி பெண் யானையின் பிறப்பு உறுப்பில் வைக்கும். மறுபடியும் துதிக்கையைத் தன் வாயில் வைக்கும். இப்படித் திரும்பத் திரும்பச் செய்து அது தன் விருப்பத்திற்கு இணங்குகிறதா என்பதைக் கண்டறியும்.

பெண் யானைக்கு உடன்பாடு என்றால் அது தனது பின்புறத்தை ஆண் யானையின் முகத்துக்கு நேர் எதிரே காட்டி இலேசாகத் தேய்க்கும். பின் அன்று இன்பத்தில் ஈடுபடும்.

★ ஆசிய யானைக்குத் தலை உச்சியின் மத்தியில் இலேசாகக் குழி விழுந்திருக்கும். அதனால் குழியின் இரு புறத்திலும் கிண்ணத்தைக் கவிழ்த்தது போல் உருண்டையாய் மேடிருக்கும். ஆனால் ஆப்பிரிக்க யானையின் தலையில் இந்தக் குழி இராது. எனவே, அதன் தலை உச்சி தட்டையாய் இருக்கும்.

★ யானை தன் பக்கத்தில் முயல்கள் வந்தால் சற்று பயப்படும்.

★ யானைகளுக்கு அதிக நினைவாற்றல் இருப்பதாகச் சொல்வது உண்மையன்று.

பொதுவாக நாய், பூனை புலி சிங்கம் போன்ற விலங்குகளுக்கு நினைவாற்றல் உண்டு. யானைகளுக்கும் அதே போன்றுதான் நினைவாற்றல் உண்டு.

யானையைப் பற்றிய கதைகளைக் குழந்தைகளுக்கு கூறும்போது அதன் பண்புகளையும் இயல்புகளையும் மிகைப்படுத்தவே அதற்குக் கூரிய அறிவாற்றல் உள்ளது எனக் கூறியுள்ளனர்.

யானை தன்னைத் துன்புறுத்திய ஒருவரைப் பல ஆண்டுகள் வரையிலும் நினைவில் வைத்திருந்து, அவர் பின் எதிர்ப்பட்டால் அவரைத் தாக்கும் என்றும் கூறியுள்ளனர். இது சரியன்று.

காடுகளில் பிடிக்கப்படும் முரட்டு யானைகளைப் பழக்கும்போது அவற்றை யானைப்பாகன் பலவழிகளில் அடித்து மிரட்டித் துன்புறுத்தியிருப்பான். இருப்பினும் பழகிய பின் யானை, பாகனது ஆணையைக் கொஞ்சமும் மீறாமல் கட்டுப்பாட்டுடன் இருப்பதைப் பார்க்கிறோம்.

வஞ்சம் தீர்க்கும் உணர்வு இருக்குமாயின் யானை சாதுவாய் இருக்க வாய்ப்பே இராது.

★ மனிதர்கள் கால்பந்து விளையாடுவதுபோல யானைக்குட்டிகளும் பந்து விளையாடும். யானைக் குட்டிகள் களிமண்ணை உருட்டிப் பந்துபோல் ஆக்கிக் கொண்டு அந்தப் பந்தை மணிக்கணக்காக உதைத்து உதைத்து விளையாடி மகிழும்.

★ யானைத் தந்த வாணிபம் பெருமளவில் சைபீரியாவிலிருந்து கிழக்கே சீனாவிற்கும் மேற்கே ஐரோப்பிய நாடுகளுக்கும் நடைபெற்றிருக்கிறது என்பதை வரலாற்றுக் குறிப்புகள் காட்டுகின்றன.

★ நான்கு தந்தங்களுடன் யானைகள் இருந்திருக்கின்றன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

★ நன்கு வளர்ந்த ஆண் யானைகள் எப்போதுமே தனித்து வாழும் இயல்பு கொண்டவையாய் இருக்கும் இப்படி வாழும் யானையைத் 'தனியன்' என்று கூறுவார்கள்.

★ தந்தங்களால் செய்யப்படும் அணிகலன்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதை நாம் அறிவோம்.

'பிலியர்டு' என்னும் விளையாட்டில் பயன்படுத்தப்படும் பந்துகள் தந்தத்தைக்கொண்டே செய்யப்படுகின்றன.

★ இன்று வாழும் யானைகளுடைய முன்னோர்களின் எலும்புகள். தந்தங்கள், புதைபடிவங்கள் ஐரோப்பாவிலும், ஸ்பெயின், ரோம் மற்றும் வடக்கு ஆசியா, வட அமெரிக்காவிலும் கிடைத்துள்ளன.

ஆனால், இன்று இப்பகுதியில் யானைகளே இல்லை என்பது அரிய செய்தியாகும்.

★ யானைகள், தும்பிக்கை வழியாக நீரை உறிஞ்சுமே தவிர அதன் வழியே குடிக்கா.

காரணம், தும்பிக்கை மூக்குதான். தும்பிக்கை வழியே நீரை உறிஞ்சுவதால் அதன் வழியேதான் குடிக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள்.

துதிக்கை வழியாக உறிஞ்சும் நீரை தும்பிக்கையை வளைத்து வாயினுள் செலுத்தும் என்பதுதான் உண்மை.

★ சிவனை கஜசம்ஹார மூர்த்தி என்பர். கஜம் என்பதற்கு வடமொழியில் யானை என்பது பொருள். யானை உருவில் ஊரை நாசம் செய்த அரக்கனைச் சிவன் வதம் செய்து அவனது யானைத் தோலைத் தன் ஆடையாக அணிந்துகொண்டார் என்பது புராணத்தில் வரும் செய்தியாகும்.

★ பதினைந்து ஆண்டுகளுக்கு முன், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் கோவிலில் ஒரு யானை இருந்தது.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் அந்த யானைக்குப் பழம் தேங்காய் கொடுத்து அதனோடு மிகுந்த அன்போடு பழகிவந்தார்கள். அந்த யானையின் பாகனும் அதனிடம் அன்பாகவேதான் இருந்தான்.

பின், பாகன் இடையில் ஏற்பட்ட குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி யானையைத் தக்க காரணமின்றி அடிக்கத் தொடங்கினான். ஒரு நாள் குடிபோதையில் இருந்த அவன் அதன் முதுகில் அமர்ந்து பயணம் செய்வதற்குப் பதிலாக அதன் வயிற்றில் ஒரு பக்கம் தொங்கிக்கொண்டு பயணம் செய்தான்.

அதனால் யானைக்கு நடக்கும்போது சிரமம் ஏற்பட்டது. எனினும் அது அவன்மீது கொண்ட அன்பால் அவனைக் கீழே தள்ளாது பொறுமையாய் இருந்தது.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் அவனின் அடாவடிச் செயல்கள் அதிகரித்தன.

ஒரு நாள் பாகன் நல்ல குடிபோதையில் யானையை வெளியில் அழைத்துச் சென்றுவிட்டு வந்து கோயிலுக்கு முன் எப்போதும் கட்டும் இடத்தில் கட்ட முயன்றபோது, யானை தன் காலைச் சங்கிலியில் நுழைக்காமல் அகற்றிக் கொண்டது. ஆனால் குடிபோதையில் இருந்த யானைப் பாகன் அதனைக் கட்டிவிட்டதாக எண்ணி அங்கேயே படுத்துவிட்டான்.

யானை சிறிது நேரம் கட்டுண்டதுபோல் பாவனை செய்துகொண்டு நின்றிருந்தது.

பின் யானைப்பாகன் தூங்கிவிட்டானா, விழித்திருக்கிறானா என்று அவன் உடலைத் தும்பிக்கையால் தொட்டு பார்த்தது. அவன் தூங்கிவிட்டான் என்பதை உணர்ந்ததும் அவ்விடத்தைவிட்டு ஓட்டமும் நடையுமாய் விரைந்தது; வீதி வழியே போனது.

அதைக் கண்ட ஊர் மக்கள் 'யானைக்கு மதம் பிடித்து விட்டது' என்று கருதி அலறிக்கொண்டு சென்று ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்த்தார்கள்.

இதற்கிடையில் ஒருவர் குடிபோதையில் படுத்திருந்த யானைப்பாகனை எழுப்பி யானை வேகமாய்ப் போவது குறித்துச் சொன்னார். அதைக் கேட்ட யானைப்பாகன் அவசர அவசரமாய் எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு கொஞ்சம் போதை தெளிந்த நிலையில் யானை சென்ற திசையை நோக்கி ஓடினான்.

அதற்குள் யானை காவல் நிலையத்திற்குச் சென்று அங்கே அமர்ந்திருந்த காவல் அதிகாரியின் சட்டையைத் தும்பிக்கையால் பிடித்துக்கொண்டது. அதைக்கண்டு சுற்றி இருந்த காவலர்கள் எல்லாம் திசைக்கு ஒருவராய் ஓடினர். யானையின் பிடியில் அகப்பட்ட காவல் அதிகாரி செய்வது அறியாது தவித்தார். யானையைச் சுடுவதா, வேண்டாவா என்று குழம்பிக் கொண்டிருந்தார்.

அந்த நேரம் யானைப்பாகன் அங்கே வர, யானை காவலரிடம் அவனைத் தும்பிக்கையால் காட்டி ஏதோ சொல்லியது. அவர் ஏதும் புரியாது விழித்தார்.

யானை கூறவிருப்பதைப் புரிந்து கொண்ட பாகன், ஐயா! நான் குடிச்சிருந்தேன்; அதை அடித்தும் விட்டேன். அதனால்தான் உங்களிடம் என்னைத் தண்டிக்கச் சொல்கிறது'' என்று விளக்கினான். அப்புறந் தான் காவல் உயர் அதிகாரி நிம்மதியானார்.

பின்பு பாகன் யானைக்குத் தெரியாமல் தன் வாயைத் தன் கையால் மூடிக்கொண்டு, ''ஐயா! நீங்கள் என்னைத் திட்டுங்கள் அடியுங்கள்! அப்போதுதான் அது இங்கிருந்து போகும்'' என்றான்.

காவல் அதிகாரியும் அதன்படியே செய்தார். பின் அவர் ''இனிமேல் இவ்வாறு நடந்துகொள்ள மாட்டேன் என்று எழுதிக் கையெழுத்துப் போடு!'' என்று பாகனை மிரட்டுவது போலக் கூறினார்.

அதன்படியே யானைப்பாகனும் யானையின் எதிரிலேயே கையெழுத்துப் போட்டுக்கொடுக்க, அதைப்பார்த்த யானை நன்றியோடு காவல் அதிகாரியைப் பார்த்து விட்டுத் திரும்பி கோயிலை நோக்கி நடந்து சென்றது.

நடந்த நிகழ்ச்சியை ஊர்மக்கள் கூடி நின்று பார்த்து வியந்தனர்.

அன்றிலிருந்து யானைப்பாகன் குடிப்பதையே விட்டு விட்டானாம்.

மனிதர்கள் செய்யவேண்டிய நல்ல காரியத்தை ஒரு விலங்கு செய்திருக்கிறது!

★ மகதநாட்டை ஆண்டு வந்தான் அஜாத சத்ரு என்ற மன்னன். இவன், தன் தந்தைக்குத்தானே விஷம்கொடுத்துக் கொன்ற பாதகன்.

அஜாத சத்ரு தான் செய்த இந்தப் பாவச் செயலுக்காக பின்பு வருத்தப்பட்டு, பாவ மன்னிப்புப் பெற புத்தபிரானை சந்திக்கச் சென்றான்.

அப்போது அவன் பெரிய நீண்ட தந்தங்களை உடைய ஆண் யானையின்மீது சென்றானாம்.

★ 'மாமத்' என்ற உருவ அமைப்பில் யானை இனம் ஒன்று தோன்றியது. இன்றைய யானைகளின் மூதாதையர் என்று இந்த 'மாமத்'களையே கூறவேண்டும்.

பெரிய உடலும், மிகப்பெரிய வளைந்த தந்தங்களும் உடைய இதன் உடல் முழுதும் முடி அடர்த்தியாய் சடை சடையாய் இருக்கும்.

ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த சில மாமத்களுக்கு உடலில் முடி இல்லை.

ஐரோப்பாவில் சில இடங்களிலும் சைபீரியாவிலும் வாழ்ந்த மாமத்களுக்கு உடல் முழுதும் முடி மண்டிக் கிடந்தது. இதை ஊலி மாமத் என்று வழங்குகிறார்கள்.

★ யானை பிடிப்பதில் பலமுறைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று 'கெத்தா' என்பது. இந்த முறையில் யானையைப் பிடிக்க 400 பேர் வரை தேவைப்படுமாம்.

★ யானை இனத்தில் ஒரு வகையாகக் கருதப்படும் கம்பளி யானை 10,000 ஆண்டுகளுக்கு முன்னேயே அழிந்து விட்டது என்றும் ரஷ்யாவிலுள்ள வடபகுதிக் குளிர்ப் பிரதேசப் பனிப் பாறைகளில் அவ்வப்போது அதன் புதை யுண்ட உடல் சிதைவுகளும் உறுப்புகளும் கிடைக்கின்றன.

1901-ஆம் ஆண்டு சைபீரியாவின் சிறிய கிராமம் ஒன்றில் வாழ்ந்த விவசாயிகளுக்கு ஒரு விசித்திர அனுபவம் ஏற்பட்டது.

ஆமாம்; ஒரு நாள் அந்தக் கிராமத்து நாய்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு குதிபோட்டன. அவற்றின் எஜமானர் கள் அவற்றை அவிழ்த்துவிட்டதும் அவையெல்லாம் ஒன்று கூடி ஒட்டமாய் ஊருக்கு வெளியே ஓடின.

கிராமத்து மக்களும் நாய்களைப் பின் தொடர்ந்து ஓடினர். ஓடிய அவையெல்லாம் ஓர் இடத்தில்மோப்பமிட்டுத் தோண்டின.

அதைத் தொடர்ந்து கிராமத்து மக்களும் அந்த இடத் தைத் தோண்டினார்கள். குறிப்பிட்ட அளவு தோண்டிய பிறகு அங்கே கம்பளி யானையின் உடல் புதைந்த நிலையில் இருந்தது.

அது பனிப்படலத்தில் புதைந்து அழுகாமல் இருந்தது கண்டு, கிராமத்து மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

இது பற்றிய செய்தி ஊர் முழுதும் பரவியதும் ஆய்வு நிபுணர்கள் படையெடுத்து அந்தக் கிராமத்தை நோக்கி வந்தார்கள்.

13 கிலோ கிராம் உணவு சாப்பிட்ட பிறகே அந்த யானை இறந்து விட்டதாக அவர்கள் ஆராய்ந்து சொன்னார்கள்.

இந்த ஆய்வாளர்களுக்கு பேரும், புகழும் பணமும் கிடைத்தன. கிராமவாசிகளுக்குப் பாராட்டு கிடைத்தது.

இறுதியில் அந்த யானை மாமிசம் நாய்களுக்கு விருந்தாக்கப்பட்டது.

★ ஆஸ்திரேலியாவில் உள்ளது 'மெல்போர்ன்' என்னும் ஊர். அந்த நகரில் வாழ்ந்து வந்தவள், கதய்லாலோர் என்பவள்.

ஒருநாள் அவள் வாழ்ந்த தெருவில் யானை ஒன்று வந்தது. யானையைக் கண்டால் யாருக்குத்தான் மகிழ்ச்சி பிராது? அவளும் மகிழ்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது ஐந்து குழந்தைகளும் கைகொட்டி சிரித்து மகிழ்ந்தன.

அப்போதுதான் அவளுக்கு அந்தஎண்ணம் தோன்றியது இந்த யானையின் மீது நாமும் குழந்தைகளும் ஏறிச் சென்றால் எப்படி மகிழ்ச்சியாக இருக்கும் என்று.

அதன்படியே அவள் யானைப்பாகனை அழைத்துக் கேட்டாள்.

"அப்படியே செய்கிறேன். ஆறு பேருக்கும் அறுபது ரூபாய் கொடுங்கள்'' என்றான். அதன்படியே அவளும் கொடுத்துக் குழந்தைகளோடு குதூகலமாய் யானைமீது ஏறிச்சவாரி செய்தாள்.

முதலில் சாதுவாகப் பயணம் செய்துகொண்டிருந்த யானை, எதனாலோ, மதம் பிடித்ததுபோல ஓடத் தொடங்கியது.

குழந்தைகளும் அவளும் நிலைகுலைந்து கூச்சலிட்டார் கள். தெருவில் கூடியிருந்த மக்கள் பீதியடைந்தார்கள்.

தறிகெட்டு யானை ஓடியதால் தெருவோரம் நின்று பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தினருள் பதினோரு பேருக்குக் காயம் ஏற்பட்டது.

பின்பு அந்த யானை, தன் மீது அமர்ந்திருந்த அறு வரையும் உலுக்கிக் கீழே தள்ளிவிட்டு விட்டுத்தன் போக்கில் போய்க் கொண்டிருந்தது.

ஆனால், நல்ல வேளையாக அந்த யானையின் கால் களில் குழந்தைகளோ தாயோ மிதிபடாமல் தப்பினர்.

★ ஆண் யானைகளுக்கு மதம் பிடித்தால் அவை பெண் யானைகளைத் தேடி அலைவதில் விருப்பம் கொள்ளும்.

ஆண் யானைகளுக்கு எப்போது வேண்டுமானாலும் மதம் பிடிக்கலாம் என்றாலும், அந்த வேளையில் அந்தப் பகுதியில் உடல் உறவுக்குத் தயாரான பெண் யானைகளே அதிகமாகக் காணப்படும்.

இது ஒரு நோயா அல்லது காமச் செயலா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

மதம் முற்றி விட்டால் யானைக்குப் பைத்தியம் பிடித்த நிலை ஏற்படும். அப்படித் திரியும் யானையை 'ரோக் எலிஃபெண்ட்' என்று வழங்குகிறார்கள்.

இந்த நிலைக்கு உட்படும் யானைகளைச் சில நேரங் களில் சுட்டுக் கொன்றுவிடுகிறார்கள்.

★ இந்தியா முழுவதையும் ஆட்சி செய்தவர்கள், ஆங்கிலேயர்கள். இந்திய யானைகளின் வீரமிக்க செயல் களையும் அவற்றின் நுட்பமான அறிவையும் கண்டு

வியந்ததோடு அவற்றின் மீது அவர்கள் ஈடுபாடும் விருப்பமும் கொண்டிருந்தார்கள்.

1941ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் அவர் மனைவி மேரியும் டில்லியில் 'இந்திய சக்கரவர்த்தி இந்திய சக்கரவர்த்தினி' என்று பட்டம் சூட்டிக் கொண்டு முடிசூட்டு விழாவைக் கொண்டாடினார்கள்.

அப்போது ஆங்கிலேயர் ஆட்சியின் கீழிருந்த மன்னர்கள் யாவரும் அலங்கரிக்கப்பட்ட யானைமீதே வந்தார்கள்.

அது சமயம் இந்தியாவை ஆண்ட ஆங்கில அதிகாரியை வைசிராய் என்று வழங்குவார்கள்.

இவரும் இவர் துணைவியாரும் ஒரு பெரிய யானை மீது உலா வந்தார்கள்.

அந்த யானை எப்படி அலங்கரிக்கப்பட்டிருந்தது தெரியுமா?

அந்த யானையின்மீது தங்க ஜரிகை இழைகளால் உருவாக்கப்பட்ட பட்டாடை போர்த்தப்பட்டிருந்தது.

யானைக்கு நுணுக்கமாய் கலை நுட்பத்தோடு செய்யப்பட்ட முகப்படாம் அணியப்பட்டிருந்தது. அழகிய குஞ்சங்களும் சேர்க்கப்பட்டிருந்தன.

யானைமீது, சிற்ப நுணுக்கத்தோடு வெள்ளியால் வேலைப்பாடு செய்யப்பட்ட அம்பாரி கட்டப்பட்டிருந்தது. வெள்ளியால் ஆன அம்பாரி சூரிய ஒளியில் சுடர் விட்டு மின்னியது. அது பார்த்தவர் கண்களைக் கூசச் செய்தது.

வைசிராயும், அவர் துணைவியாரும் அமர்ந்திருந்த அம்பாரியின் மீது ஒரு பணியாள் தங்கத்தால் செய்யப்பட்ட குடையைப் பிடித்தபடி பின்பக்கம் நின்றிருந்தான்.

அந்த யானையைத் தொடர்ந்து இந்திய மன்னர்களின் பட்டத்து யானைகள் அணிவகுத்து வந்தன.

அந்த யானைகளின் கால்களில் தங்கம், வெள்ளியால் நேர்த்தியாகச் செய்யப்பட்ட அழகிய கொலுசுகள் அணிவிக்கப்பட்டிருந்தன. அவற்றின் நீண்ட துதிக்கைகளில் வகை வகையான வண்ணங்களால் நளினமாய்க் கோலங்கள் போடப்பட்டிருந்தனவாம்.

பட்டாடைகளையும் முத்து, பவழம் ஆகிய நவரத்தினங்களைக் கொண்டு செய்யப்பட்ட அணிகளையும் அவற்றின் மீது போர்த்தப்பட்டிருந்தது. அவற்றின் காதோரங்களில் தங்க அணிகளை (டோலாக்கு)யும் அணிவித்திருந்தனர்.

★ நம் இந்தியாவின் மீது பலர் படையெடுத்து வந்தனர்.

12ஆம் நூற்றாண்டில் படை எடுத்து வந்த முஸ்லிம் மன்னர்களுள் முகமது கோரியும் ஒருவர்.

அவரை எதிர்த்து நின்ற பிருதிவிராஜன் வீரசுவர்க்கம் அடைந்தார். அதனால் மற்ற அரசர்கள் பின்வாங்கவில்லை மனம் தளரவில்லை.

காசிராஜன் ஜயசந்தன் கோரியை எதிர்த்துப் போரிட்டான்.

இருதரப்புப் படைகளும் வீராவேசமாய் மோதிக் கொண்டன. நடந்த போரில் இருபடைகளிலும் வீரர்கள் பலர் இறந்தார்கள்.

கோரியின் படைபலம் வலிமை கொண்டதாய் இருந்ததால் ஜயசந்தனின் வீரர்கள் அனைவரும் இறுதியில் இறந்தனர்.

காசிராஜனும் அவன் பட்டத்து யானையும் மட்டுமே பிழைத்தனர். தனித்து இருந்த காசிராஜன் கலங்கவில்லை அந்த நிலையிலும் எதிரிப் படையை நோக்கிச் செல்ல யானைக்குக் கட்டளையிட்டான்.

யானை தன் பெருத்த உடலை அசைத்துக்கொண்டு எதிரியை நோக்கிச் சென்றது.

எதிரியின் முன்படையினர் பட்டத்து யானையிடம் ஈடு கொடுத்து எதிர்த்து நிற்க முடியாததால் சிதறுண்டனர்.

பட்டத்து யானையின் பலத்தையும் விவேகமிக்க வீரத்தையும் கண்ட கோரியின் கண்கள் சிவந்தன. அவன் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டான்.

தன் அருகில் நின்றிருந்த குதுப் உதீனைக் கோபத்தோடு பார்த்தான். மன்னனின் மனஓட்டம் அறிந்த சிறந்த மறவன் அவன். வில் பயிற்சியில் பெயர் பெற்றவன். அவன் வைத்த குறி தப்பாது.

மன்னனின் முகம் பார்த்த குதுப்உதீன் மறு நொடியே காசிராஜனுக்குக் குறி வைத்தான்.

வைத்த குறி தப்பவில்லை. ஓர் அம்பு காசிராஜன் கண்ணிலே குத்தி நின்றது. மறு அம்பு அவனது உயிரைப் பறித்துக் கொண்டது.

குலமானம் காக்கத் தனியே களம் சென்ற காசிராஜன் களத்திலேயே மாண்டான்.

யானையின் மீதிருந்து உயிர்விட்ட மன்னனின் உடலை எடுத்துப் போக எதிரிகள் சூழ்ந்தனர்.

ஆனால், யானை தன்மீது இருந்தபடியே போரிட்டு இறந்து வீர சொர்க்கம் எய்திய மன்னனின் உடலை எதிரிகள் நெருங்கவிடாது, துதிக்கையால் சுழற்றிச்சுழற்றி அடித்தது. வீரர்கள் சிலரைத் தன் துதிக்கையால் தூக்கி மண்ணில் போட்டு மிதித்துச் சிலரைத் தனது நீண்ட தந்தத்தினால் குத்தி அவர்தம் குடலை வெளியே இழுத்துப் போட்டது. பலரைத் தன் வாலால் அடித்து வீழ்த்திச் சாய்த்தது.

இவ்வாறு அந்தப் பட்டத்து யானை தன்மேல் இருந்தபடி உயிர்விட்ட மன்னனை எதிரிப்படைகள் எடுத்துச் செல்லாத அளவிற்கு ஓட ஓட விரட்டி அடித்ததும்; பின், தன் அன்பிற்குரிய மன்னனின் உயிரற்ற உடலைச் சுமந்து கொண்டு அரண்மனையை நோக்கிப் போயிற்று.

அங்குள்ளோர் பட்டத்து யானை சுமந்து வந்த உயிரற்ற மன்னனின் உடலைத் தக்க மரியாதையோடு அடக்கம் செய்தார்கள்.

வெற்றிபெற்ற திமிரோடு முகமது கோரியின் அடிமை குதுப்உதீன் காசி மாநகரில் நுழைந்தான். மன்னரின் அணிமணிகளைத் தன் வசம் ஆக்கிக் கொண்டான்.

கொள்ளையடித்த நகைகளையும் பணத்தையும் கோரி யின் முன் கொண்டுவந்து சேர்த்தான்.

அத்தோடு போரில் தான் கைப்பற்றிய ஜயசந்தானின் முந்நூறு யானைகளை கோரியின் முன்னால் வரிசையாக நிறுத்தி வைத்தான்.

அந்த வரிசையில் பட்டத்து யானையும் இருந்தது.

முகமதுகோரிக்கு முன்னால் முன்னூறு யானைகளும் பணிந்து வணங்க வேண்டும் என்று மூர்க்கன் குதுப்உதீன் யானைப் பாகர்களுக்கு கட்டளை பிறப்பித்தான்.

அதனால் யானைப்பாகர்கள் புதிய ஆட்சியாளர்களின் கட்டளைக்குப் பணிந்து யானைகளை முகமதுகோரிக்கு வணக்கம் செய்யச் சொன்னார்கள்.

முதலில் மறுத்து நின்ற யானைகள் அங்குசத்தால் அடிபட்டதும் அவர்கள் சொற்படியே வணங்கின.

ஆனால் பட்டத்து யானை மட்டும் அவர்கள் சொல்லிற்குக் கீழ்ப்படியாது நின்றது.

அப்படி நிற்பதைப் பார்த்த கோரி வெகுண்டான். அவன் கோபத்தைக் கண்ட யானைப்பாகன் பட்டத்து யானையை அங்குசத்தால் குத்தினான்.

'இந்த மாற்றானுக்கு மண்டியிடுவதா நாம்' என்ற எண்ணத்தில் பட்டத்து யானை மீண்டும் மௌனமாய் இருந்தது.

பின், அந்த யானை தன் மேலே இருந்து அங்குசத்தால் அடித்துக் கொண்டிருந்த யானைப்பாகனை வெறியோடு தன் உடலைக் குலுக்கிக் கீழே வீழ்த்தியது. யானைப்பாகன் பொத்தென்று தரையில் வீழ்ந்தான்.

வீழ்ந்த பாகன் எழுந்து கோபத்தோடும் வெறியோடும் அதனை நெருங்கி அடித்தான்.

மீண்டும் யானை அமைதி காத்து தன்னை வளர்த்தவன் என்ற நன்றியுணர்வோடு அவனை அது திருப்பித் தாக்கவில்லை. 'என்னைத் துன்புறுத்தாதே! என்னை மாற்றான் முன்னே பணிய வைக்காதே! என் மீது கோபம் கொள்ளாதே!' என உணர்த்துவது போல் கண்களில் நீர் வழியப் பார்த்தது.

அதை உணர்ந்து கொள்ளாத யானைப்பாகன், நேற்று வரை என் கட்டளைகளுக்குப் பணிந்து நடந்த

இந்த யானைக்கு இன்று இத்தனை திமிரா' என்று கோபத்தோடு அதை மீண்டும் அடித்தான்.

அந்த யானை தன்னைக் கோபத்தோடு அடித்துக் கொண்டிருந்த பாகனை அப்படியே அலக்காகத் தும்பிக் கையால் தூக்கி அப்பால் நிறுத்திவிட்டு மீண்டும் அமைதியாய் நின்றது.

யானைப்பாகனோ கோபத்தின் உச்சிக்கே போய் விட்டான். அவன் கோபத்தோடும் வெறியோடும் யானை மீது தாவி ஏற முயன்றான்.

பொறுமைக்கும் எல்லை உண்டு அல்லவா?

யானை அந்தப் பாகனை அப்படியே துதிக்கையால் வாரிச்சுருட்டி வானத்தை நோக்கி விசிறி அடித்தது.

சில நொடியில் அப்பாகன் மண்ணில் வீழ்ந்து மாண்டான்.

அதைப் பார்த்த மற்ற யானைப்பாகர்கள் பட்டத்து யானையை அடக்க ஓடோடி வந்தார்கள்.

அதைக் கண்டு யானை வெகுண்டது, பிளிறியது, அவர்களைத் துரத்தியது.

அத்தனை பேரும் அலறிப் புடைத்து ஓட்டமெடுத் தார்கள். தன்னையும் பிடித்துக் கொன்றுவிடுமோ என்ற பயத்தில் குதுப்உதீனும் பிடரியில் கால்பட ஓட்ட மெடுத்தான்.

ஆனால், நல்ல உள்ளம் கொண்ட அந்தப் பட்டத்து யானை எவருக்கும் எந்தத் துன்பமும் விளைவிக்கவில்லை.

ஒரு முறை அது சுற்றிலும் நோட்டமிட்டுப் பார்த்தது பின் அரண்மனை நோக்கிச் சோகத்தோடு நடந்தது.

மன்னன் காசிராஜன் வாழ்ந்த அந்த உயர்ந்த மாளிகையை அது கண்களில் நீர்வழிய ஒருமுறை தலை தூக்கிப் பார்த்தது. பிறகு, அரண்மனையை மூன்று முறை சுற்றி வந்தது.

அடுத்து மயானத்தை நோக்கிச் சென்றது மன்னரை எரித்த இடத்தில் நின்று பிளிறியது அதன் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது. அதே நிலையில் மூன்று நாள்கள் உணவு கொள்ளாது இருந்தது.

ஊர் மக்கள் பட்டத்து யானையின் பாச உணர்வையும் மான உணர்வையும் எண்ணி எண்ணி வேதனைப் பட்டார்கள்.

அதற்கு அரிசி, தேங்காய், வெல்லம், தழை முதலிய வற்றைக் கொண்டுவந்து கொடுத்துத் தின்னும்படி வேண்டினார்கள்.

ஆனால், அந்த மானமுள்ள யானையோ அவர்கள் கொண்டுவந்து குவித்திருந்த எதையுமே தொடவில்லை. பட்டினியாகவே இருந்தது.

நான்காம் நாள் காலையில் சூரிய உதய வேளையில், மலை சாய்வது போல் யானை தரையில் சாய்ந்தது, உயிர் துறந்தது.

அதைக் கண்டு மக்கள் வருந்தினார்கள்; கண்களில் நீர் வழிய அந்த யானையை மன்னரின் பக்கத்திலேயே அடக்கம் செய்தார்கள்.

யானைக்கு ஐந்தறிவா ஆறு அறிவா?

★ யானை மோதி மரந்தான் சாயும். ஆனால், யானைமீது பஸ் மோதி யானை ஒன்று சாய்ந்திருக்கிறது.

இந்த சம்பவம் கோவை அருகே உள்ள நரசிம்ம நாயக்கன் பாளைத்தில் 1996ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதி நடந்தது.

காரமடையில் உள்ள ஒரு கோவில் திருவிழாவிற்கு கேரளாவிலுள்ள பாலக்காட்டிலிருந்து வந்த அந்த யானை திருவிழா முடிந்து திரும்பிக் கொண்டிருக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் யானைப்பாகர் இருவரும் 15 பஸ் பயணிகளும் காயம்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டனர்.

ஒரு பஸ் கட்டுப்பாட்டை இழந்து வந்து இன்னொரு பஸ் மீது மோதி, பின், யானைமீது மோதியது.

பஸ் வேகமாய் வந்து யானைமீது மோதியதால், யானை நிலை தடுமாறி கீழே பலத்த காயத்தோடு விழ்ந்தது.

பலத்த அடி ஏற்பட்டதால் யானை உயிருக்குப் போராடியது.

கால்நடை மருத்துவர்கள் விரைந்து வந்து சிகிச்சை யளித்தனர். அந்த யானைக்கு நுரையீரலில் அடிபட் டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது பின் கோவையில் உள்ள மருத்துவமனைக்கு யானையை லாரியில் ஏற்றிச் சென்றார்கள்.

★ பெரிய கோயில்களில் உயிருள்ள யானைகள் இருக்கும். கோயில் களில் யானை சிற்பங்களும் இருக்கும்,

★ இரண்டாம் வயது முதல் மூன்றாம் வயதிற்குள் யானைக்குட்டிகளுக்குத் தந்தம் முளைக்கிறது. முளைத்த கொஞ்ச காலத்திலேயே அது வாயிலிருந்து வெளியே நீண்டு வளர்கிறது.

வளர்ந்த தந்தத்தோடு குட்டி பால் குடிக்கும்போது தாய் யானையின் மடியில் காயம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் தாய் யானை பக்குவமாய்க் குட்டிக்குப் பால் மறக்கடிக்க முனைகிறது.

★ மனிதர்கள் தங்கள் குழந்தைகளை மேலே தூக்கிப் போட்டு மகிழ்ச்சியாய் விளையாடுவது போல யானைகளும் தங்குட்டிகளைத் தும்பிக்கையால் மேலே தூக்கிப்போட்டு மகிழ்ச்சியோடு பிடித்து விளையாடும்.

★ பிறந்த யானைக்குட்டி 120 கி.கிராம் எடையுள்ளதாயும் 3 அடி உயரமுள்ளதாயும் இருக்கும்.

இந்த நிலையில் குட்டி நாள் ஒன்றுக்கு மூன்று லிட்டர் தாய்ப்பால் குடிக்கும். நாளாக நாளாக மூன்று லிட்டரிலிருந்து பதினைத்து லிட்டர்வரை இது கூடும்.

★ மற்ற விலங்குகள் தங்கள் குட்டிகளுக்குப் பால் கொடுக்க அவற்றுக்கு நான்கு காம்புகள் இருக்கும். ஆனால், மனிதர்களுக்கு இருப்பதுபோல் யானைக்கு இரண்டு காம்புகள் மட்டுமே இருக்கும்.

★ எபிரஸ் நாட்டு மன்னன் பைரஸ் தன் யானைகளைப் பயிற்றுவித்து போர்ப்படையில் பயன்படுத்தியிருக்கிறான் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

கி.மு. 280ஆம் ஆண்டில் ரோமானியர்களை எதிர்த்துப் போரிட்டபோது, அவன் படையில் யானைகள் இருந்ததை

அறிய முடிகிறது. ரோமானியர்களுக்கோ யானைப்படை புதியதாகும். ஹெராக்ளி அஸ்குலம் ஆகிய போர்களில் ரோமானியர்களைத் தோற்கடித்தான் பைரஸ்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்நாளைய மண்பாண்டச் சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவற்றில் யானை உருவங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

★ நம் நாட்டை ஆட்சிபுரிந்த மன்னர்கள், நீண்ட தந்தங்களைக் கொண்ட பெரிய ஆண் யானைகளை நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற போர்வை, முகபாடம் ஆகியவற்றால் அழகுபடுத்தி அவற்றின் மீது அமர்ந்து உலா வருவதைத் தங்கள் வீரத்தையும் மதிப்பையும் நிலைநாட்டும் செயலாக எண்ணினார்கள்.

★ ஆடு மாடுகளைப் போல் ஒரே நாளில் யானையைப் பிடித்துவிட முடியாது.

இரண்டு மூன்று மாதங்கள் காட்டினுள் தங்கி இருந்து எங்கு செல்கிறது எப்படி வருகிறது வயது என்ன இருக்கும் என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து அறிந்த பின்புதான் யானையைப் பிடிக்க முயல்வார்கள்.

★ 1992ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி இரயில் பாதை ஒன்றில் போராட்டம் நடந்தது.

அந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் மனிதர்கள் அல்லர். பிறகு? நான்கு யானைகள் நடத்தின. அதனால் போக்குவரத்து தடைப்பட்டது.

மேட்டுப்பாளையத்தை அடுத்த பர்ளியாற்றுக்கு அருகே (உதகை) இரயில் பாதையில்தான் இந்தப் போராட்டம் நடந்தது.

நீலகிரி மலைப்பகுதியில் கடும் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டதனால் அங்கு இருந்த யானைகள், மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வரத்தொடங்கின.

கல்லாறு அருகே மலைப்பாதையிலும் யானைக் கூட்டம் சாலையை மறித்ததால் போக்குவரத்து பாதிக்கப் பட்டது.

இதை அறிந்த வனத்துறை ஊழியர்கள் யானைகளைச் சமாதானப்படுத்தி அவற்றின் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

பின்னர், யானைகள் தண்ணீரைத் தேடிக் கிராமத் திற்கு வராதபடி வனத்துறை அலுவலகத்திற்கு அருகே பீப்பாய்களில் தண்ணீரை நிரப்பி வைத்து அவற்றின் தேவையைப் பூர்த்திசெய்ததோடு அவற்றின் கோபத்தை யும் தவிர்த்தார்களாம்.

★ ஆப்பிரிக்க யானைகளின் உடலுறவு வாழ்க்கை வியப்பிற்குரிய ஒன்றாய் இருக்கிறது.

ஆமாம்; ஒருமுறை ஓர் ஆண்யானை பெண்யானை ஒன்றுடன் உடலுறவு கொண்டது என்றால், அத்தோடு அந்த நிமிடமே அந்தப் பெண் யானையை விட்டுவிட்டுப் போய்விடாது. அதனைக் காவல் காப்பதுபோல் அதனோ டேயே நின்றிருக்கும்.

உடல் உறவு முடிந்த பின் பெண் யானை பலத்த முனகல் சத்தத்தை எழுப்பும்.

அந்த ஓசை காடு முழுதும் எதிரொலிக்கும். ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள வேறு ஓர் ஆண் யானையால் மனிதர்கள் கேட்க முடியாத அந்த முனகல் ஒலியைக் கேட்க முடியும்.

இது தனது காமவேட்கையை வேறு ஓர் ஆண் யானைக்குத் தெரிவிக்கும் குறிப்பு ஒலியாகும்.

தூரத்தில் இருந்தவாறு அந்த ஒலியைக் கேட்ட ஆண் யானை, அந்தப் பெண் யானையை நோக்கிச் செல்லும்.

அங்கு குரல் எழுப்பிய பெண் யானைக்குப் பக்கத்தில் ஆண் யானை ஒன்று நிற்பதைப் பார்க்கும்.

அந்த யானைதான் அதனோடு முதலில் உடலுறவு கொண்ட யானை என்பதைப் பின்னர் வந்த ஆண் யானை அறிந்து கொள்ளும் பெண் யானைக்குக் காவலாய் நிற்கும் ஆண்யானை தன்னை விடப் பலம்கொண்டதாய் இருந்தால் காமவேட்கையோடு வந்த யானை திரும்பிப் போய்விடும். ஆனால் உடலுறவிற்காக ஓடிவந்த யானை பலமிக்க தாய் இருப்பின், அது, பெண் யானைக்கு அருகில் காவல் புரியும் ஆண் யானையைத் துரத்தி அடித்துவிட்டு, அந்தப் பெண் யானையுடன் கூடி உடலுறவு கொள்ளும்.

அந்த உறவு முடிந்ததும் மறுபடியும் அப்பெண் யானை முன்போல் முனகல் ஒலி எழுப்பும்.

அப்போது வேறு ஓர் பலமிக்க ஆண் யானை வந்தால் பெண் யானை அதனுடன் உடலுறவு கொள்ளும்.

இவ்வாறு காம உணர்வு முடிவடையும் ஆறாவது நாள் அந்தக் காட்டின் பலமைல் சுற்றளவில் எது பலம் கொண்ட ஆண் யானையோ அது அப்பெண்யானையோடு

உடலுறவை முடித்துக்கொண்டு கம்பீரமாய் நின்றுகொண்டிருக்கும்.

அப்போதுதான் அதன் முட்டை கருப்பையைக் கடந்து உள்ளே சென்று கருத்தரிக்கும்.

இவ்வாறு பெண் யானை, அந்தப் பகுதியிலுள்ள மிகவும் வலுவான ஆண் யானையோடு கூடியே கருத்தரித்துக் குட்டியை ஈனுகிறது.

★ யானையின் துதிக்கை நுனி முதல் வால் நுனி வரையிலான அளவு 26 அடி ஆகும். தந்தம், ஏழு அடி நீளம் வரை வளரும். யானையின் உயரம், பத்தடி. அதன் உடலின் சுற்று அளவு சுமார் 22அடி.

★ ஆயிரம் யானைகளின் பலம் கொண்டவன் என்று புராணக் கதையில் குறிப்பிடப்படும் பீமனின் பகதத்தன், சுப்ரதீபன் ஆகியோரின் வலிமையையும், பலத்தையும் குறிப்பிடுவார்கள்.

★ தேவர்களின் அரசனான இந்திரனின் வாகனம் ஐராவதம் என்ற பெயருடைய வெள்ளை யானையாகும்.

★ யானை இறைவனைத் துதித்த கதை தெரியுமா?

திருச்சி மாவட்டத்தில் உள்ளது திருவானைக்காவல் என்னும் திருத்தலம். இத்தலத்தில்தான் அகிலாண்டேஸ்வரியின் ஆலயம் இருக்கிறது. யானை ஈசனை வழிபட்ட தலம் இது.

ஜம்புகேஸ்வரம், நாவல் மரக்காட்டில் இருந்த சிவலிங்கத்திற்கு ஒரு யானை நித்தமும் காவிரி நீரினால் அபிஷேகம் செய்து வழிபட்டது.

★ யானைகள்மீது தாய்லாந்து மக்கள் மிகுந்த அன்பு கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.

அந்நாட்டில் அரசும், வனவிலங்குகளை நேசிப்பவர்களும் யானைகளைப் பாதுகாக்கத் தீவிரமாய் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.

இதற்காக, அங்கு லம்பாங் என்னும் இடத்தில், மிகப் பெரிய அளவில் யானை மருத்துவமனை ஒன்றனைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

நோயினாலோ, விபத்துகளாலோ பாதிக்கப்படும் யானைகளுக்கு இங்கே மருத்துவம் பார்க்கப்படுகிறது.

யானைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய இங்குப் புதுவிதமான வசதிகளுடன் கூடிய பெரிய அறுவைச் சிகிச்சைக்கூடம் மற்றும் தீவிர சிகிச்சைப்பிரிவு உட்பட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

★ கி.மு 232ஆம் ஆண்டு முதல் 273ஆம் ஆண்டு வரை இந்தியாவின் பெரும்பகுதியை ஆட்சிபுரிந்த மன்னன் அசோகன். இவன் உலகையே ஆள நினைத்தான். அதன் படியே பல நாட்டைக் கைப்பாற்றி அரசு புரிந்தான்.

இவன் கலிங்கப்போருக்குப் பின் புத்தமதத்தைச் சார்ந்து வாழ்ந்தான்.

இம்மன்னன், பொது நிகழ்ச்சிகளிலும், வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளும் போதும் தான் புனிதமாகக்கருதிய யானைமீது அமர்ந்தே செல்வானாம்.

★ புத்த மதத்தைத் தோற்றுவித்தவரான கௌதமர் பிறக்கவிருப்பத்தை அவர் தாய் மாயாதேவி தான் கண்ட கனவின்மூலம் முன்னரே அறிந்தாள்.

மாயாதேவியின் கனவில் 'சாதஸ்தா' என்ற வெள்ளை யானை தோன்றியது. அது துதிக்கையில் தாமரை மலரை

ஏந்தியபடி, "உனக்கு ஓர் ஒப்பற்ற ஆண் மகன் பிறக்க விருக்கிறான்!" என்னும் செய்தியைக் கூறிவிட்டு மறைந்ததாம்.

★ ஒரு யானை குட்டியை ஈன்றுவிட்டால் போதும் நடுக்காட்டில் பூமி அதிர யானைகள் குதித்துக் கும்மாளம் போடும்; உரத்த குரலில் பிளிறி நடனம் ஆடும். மகிழ்ச்சியின் எல்லைக்கே போய்விடும்.

★ இரண்டாவது உலகப்போரின் போது (1944), சிண்ட்வின் ஆற்றை இரவில் கடக்க ஜப்பானியர் 350 யானைகளைப் பயன்படுத்தினார்கள்.

★ கோண்ட்வானா என்பது பரந்துபட்ட அரசாகும். சாந்தளர்களின் வழித்தோன்றலான துர்க்காவதி என்ற அரசி அந்த நாட்டை ஆண்டுவந்தாள்.

இவளிடம் 20 ஆயிரம் குதிரை வீரர்படையும், ஆயிரம் யானைகள் கொண்ட படையும் இருந்தன என்று ஒரு குறிப்பு கூறுகிறது.

★ சில நேரங்களில் யானைகளின் இறப்பு வேதனைக் குரிய ஒன்றாய் இருக்கும்.

காட்டில் அடை மழைக் காலங்களின் போது, யானைகள் மரத்தின் அடியில் நின்று, ஒன்றன் வாலை மற்றொன்று பிடித்துக்கொண்டு, 'பாதுகாப்போடு இருக்கிறோம்' என்னும் எண்ணத்தில் நின்றிருக்கும். அவ்வாறு ஒரு முறை நின்றிருக்கும் போது, மின்னல் அந்த மரத்தைத் தாக்க அந்த மின்னல் மரத்தின் கீழ் நின்றிருக்கும் ஒரு யானையைத் தாக்கியது. அதனால் அந்த யானையின் வாலைப் பிடித்துக்கொண்டிருந்த அடுத்த யானையும் இறந்தது. அதேபோல், வரிசையாக ஒன்றன் வாலை மற்றொன்று எனப் பிடித்திருந்த அத்தனை யானைகளும்

மின்னலின் கடுமையால் தாக்குண்டு ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இறந்து விட்டன.

★ கார்த்தஜினியர்களுள் புகழ்பெற்றவீரன், ஹனிபால். இவன் போர்க் காலங்களில் அமர்ந்து சென்ற யானை இந்திய யானைதானாம்.

அந்த யானையின் பெயர், சூரஸ் என்பதாகும்.

இந்தச் செய்தியை காடோ என்ற ரோமானியர் தம் குறிப்பில், "ஹனிபால் நடத்திய போரில் தீரமுடன் சாகசங்கள் புரிந்த யானை சூரஸ்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சூரஸின் உருவம் பதித்த நாணயங்களையும் ரோமானியர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

★ தஞ்சை பெரிய கோவிலில் உள்ள யானையின் பெயர் வள்ளி. வள்ளி அமைதியானவள்.

யானைப் பாகனுக்குச் செல்வராஜ் என்னும் நண்பன் ஒருவன் இருந்தான். அவன் குடி போதையில் வந்து யானையைச் சீண்டினான்.

நீண்ட நேரம் பொறுமையாய் இருந்தது வள்ளி. மேலும் மேலும் வரம்பு மீறி செல்வராஜ் நடந்துகொண்டது வள்ளிக்குப் பிடிக்கவில்லை.

எனவே, குடிகாரன் செல்வராஜ்மீது கோபம் கொண்ட வள்ளி, அவனைத் தனது துதிக்கையால் ஓங்கி ஓர் அடி அடித்துக் கீழே தள்ளி விட்டது.

நண்பனின் அலறல் ஒலி கேட்டு யானைப் பாகன் ஓடி வந்து யானையைச் சமாதானம் செய்தான்.

குடிகாரன் சிறிய காயங்களோடு உயிர்த் தப்பினான்; ஆனால் அவன் பற்கள் உடைந்து விட்டன.

★ யானைகள் தம்இனத்தோடு சண்டையிடும் போதோ, மனிதர்கள் துன்பம் ஏற்படுத்தும் போதோ ஏற்படும் காயங்களின்மீது களிமண்ணை எடுத்துப் பூசிக் கொள்ளுமாம். அதனால் எரிச்சல் குறையுமாம், புண்ணும் ஆறுமாம்.

★ போபாஸ் என்று ஒரு வகை மரம் ஆப்பிரிக்கக் காடுகளில் இருக்கிறது. இது உயரத்திலும் பருமனிலும் பெரியதாய் இருக்கும். இந்த மரம் தண்ணீரைத் தன் பட்டைகளிலும் அடிமரத்திலும் மிகுதியாய்ச் சேமித்து வைத்திருக்கும்.

காடுகளில் தண்ணீர்ப் பஞ்சம் அதிகம் ஏற்படும்போது யானைகள் போபாஸ் மரத்தின் பட்டைகளைப் பெயர்த்து மென்று தாகத்தைத் தணித்துக்கொள்ளும்.

★ வீதியில் எவருக்காவது விபத்து ஏற்பட்டுவிட்டால் அவருக்கு உதவ முன்வருபவர்கள் மிக அரிதானவர்களே. ஆனால் ஒரு யானைக்கு விபத்து ஏற்பட்டுவிட்டால், அதோடு வந்த யானைகள் அதைத் தனியே விட்டுவிட்டுப் போய்விடுவதில்லை. மாறாக காயம்பட்ட யானையை இரு யானைகள் தாங்கிப்பிடித்து அதன் இருப்பிடத்தில் கொண்டு சென்று சேர்க்கும்.

★ பர்மாக் காடுகளில் வாழும் தந்தமில்லாத யானை தான் யானைக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்குமாம்.

★ யானைகள் கூட்டங் கூட்டமாய் மேய்ச்சலுக்குச் செல்லும். அப்போது சில வேளைகளில் அங்கேயுள்ள பள்ளங்களில் யானைகள் விழுந்துவிட வாய்ப்புண்டு.

ஒரு யானை பள்ளத்தில் வீழ்ந்து விட்டால் அதிலிருந்து அதனால் செங்குத்தாய் ஏறமுடியாது.

பள்ளத்தில் விழுந்த யானை மேலேற முடியாது தவிக்கும் போது மற்ற யானைகள் வீணில் நின்று அதைப் பார்த்துக் கொண்டு நிற்கா. பின் என்ன செய்யும்?

மற்ற யானைகள் உடனே குழியைச் சுற்றியுள்ள மண்ணைக் கால்களால் இடித்துச் சரித்துப் பள்ளத்தில் தள்ளிக் கொண்டே இருக்கும். பள்ளம் மேடான பிறகு குழியில் விழுந்த யானை எளிதில் மேலே ஏறி வந்துவிடும்.

★ யானையைக் கட்டுப்படுத்தி வேலை வாங்க பாகன் அதன் மொழியிலேயே பேசுவான்.

யானைகளுக்குக் கட்டளை இட யானைப் பாகன் உபயோகப்படுத்தும் சொற்கள் அதிகம்இல்லை. 25 வார்த்தைகளுக்குள்ளேயே அந்த மொழி அடங்கியுள்ளது.

★ பர்மாக் காடுகளில் மரம் தூக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள யானைகளுக்கு பல சலுகைகள் உள்ளன.

இரவில் காட்டில் மேய்ச்சலுக்கு சென்றுள்ள யானைகளை ஐந்து மணியளவில் அழைத்து வருவார்கள்.

அந்த யானைகளை ஆற்றிற்கு ஓட்டிச் சென்று ஒரு மணி நேரம் குளிப்பாட்டி விடுவார்கள்.

பின் அவற்றை அழைத்து வந்து, 7 மணிக்கு காலை உணவாக வடித்த சோற்றைக் கொடுப்பார்கள்.

பிறகு, காலை ஒன்பது மணிக்குக் காட்டில் மரங்களை இழுத்தல் அவற்றை அடுக்குதல் லாரிகளில்ஏற்றுதல் ஆகிய பணிகளைச் செய்யச் சொல்லுவர்.

பிற்பகல் சரியாக 12 மணி முதல் 1 மணிவரை யானைக்கு ஓய்வு அளிக்கப்படும். பின் ஒரு மணிக்கு பின் அவற்றை வேலையில் ஈடுபடுத்துவர்.

மாலை நான்கு மணிக்கு யானைகள் தங்கள் வேலையை நிறுத்திவிடும். யானைப்பாகன் சொன்னால்கூட அவை வேலையைத் தொடராது.

மாலை ஆறுமணிக்கு யானைகளுக்கு இரவு உணவாக ஓட் கஞ்சி வாழைப்பழம், தேங்காய் ஆகியவற்றை கலந்து கொடுப்பார்கள்.

பிறகு, இரவு அவை வழக்கம்போல மேய்ச்சலுக்குக் காட்டுக்குப் போய்விடும்.

கொடுத்து வைத்த யானைகள்!

★ மனிதர்களுக்கு கோபம் ஏற்பட்டால் அந்தக் கோபத்திற்கு யார் காரணமோ அவர்களைத் திட்டுவார்கள்; முடிந்தால் அடிக்கவும் செய்வார்கள்.

ஆனால், யானைக்குக் கோபம் ஏற்பட்டால் என்ன செய்யும் தெரியுமா? யானை தன் வெறுப்பை, கோபத்தை வெளிப்படுத்தத் துதிக்கையை ஓங்கி ஓங்கித் தரையில் அடித்து, வெறியோடு பிளிரும். மற்ற நேரங்களில் பிளிறுவதற்கும் கோபத்தின்போது பிளிறுவதற்கும் இடையே வேறுபாடு உண்டு.

★ பிறந்த யானைக்குட்டிகளுக்கு முதலில் தம் தும்பிக்கைகளின் பயன் என்ன என்பதை அவை அறிவதில்லை. தும்பிக்கையால் அவற்றுக்குத் தண்ணீர் கூடக் குடிக்கத் தெரியாது. அப்போது அவை நீர் நிலையில் மண்டியிட்டு வாயால்தான் நீர் அருந்தும். இந்த நிலை குட்டிகளுக்கு நான்கு மாதம்வரை இருக்கும். பிறகுதான் குட்டி, தும்பிக்கையின் பயன் அறிந்து செயல்படும்.

★ வாழ்நாள் முழுக்க யானைகுட்டி போடும். சுமார் அறுபது வயதுவரை வாழ்ந்தால், ஏழு அல்லது எட்டு குட்டிகளைப் போடும்.

★ பிறந்த குட்டிகளால் உடனே இலை, தழைகளை மெல்ல முடியாது. தாய் யானையே அந்த நேரத்தில் இலைகளைப் பறித்துத் தன் வாயால் நன்றாக மென்று குட்டிகளுக்கு ஊட்டும்.

★ யானையின் பால்காம்பில் எட்டுத்துளைகள் இருக்கும். வேறு எந்தப் பிராணிகளுக்கும் இவ்வாறு இருப்பதில்லை.

★ யானைக்கு மதம் பிடித்துவிட்டால் அதை அடக்குவது எளிதன்று அந்த நேரத்தில் அது கட்டுக்குஅடங்காது. அட்டூழியங்கள் செய்யும்.

யானைப் பண்ணைகளில் உள்ள யானைகளுக்கு மதம் பிடித்துவிட்டால் அங்கு பணிபுரிபவர்களுக்கு தலைவலி தான்.

அப்படி மதம் பிடித்த யானையை அவர்கள் மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு அதைச் சுற்றித் தீமூட்டிவிடுவார்கள்.

ஏன் அப்படித் தீ மூட்டுகிறார்கள்? யானையின் மத நீருக்கு ஒருவகை வாசனை உண்டு. அந்த மணத்தை மோப்பம் பிடித்துக் காட்டு யானைகள் வந்துவிடுமாம். அப்படி வந்துவிட்டால் மேலும் அவர்களுக்குத் தொல்லையாகிவிடும் அல்லவா?

★ மனிதர்கள்தாம் தம்மை நாடி வரும் விருந்தினர்களை வரவேற்று, உணவு வழங்குவார்கள் என்பதன்று.

காட்டில் வாழும் யானை பக்கத்தில் உள்ள காட்டிற்கு சென்றால் அங்கு உள்ள யானை அதை வரவேற்று, அக் காட்டில் உள்ள பசியமரத்தை வீழ்த்தித் தள்ளும்; பின் விருந்தாளிக்கு மரத்தின் தளிர்களையும் சிறிய கிளைகளையும் தின்னக் கொடுத்துவிட்டு பின் எஞ்சியுள்ளதைத் தின்னுமாம்.

★ கரும்புத் தோட்டம், வாழைத்தோட்டம் ஆகிய வற்றைக் கண்டுவிட்டால் யானைகளுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

பழக்கப்பட்ட யானைகளுக்கு இப்படிச் செய்வது தவறு என்பது தெரியும். எனினும் அது தோட்டத்தைக் கண்டதும் எல்லாவற்றையும் மறந்துவிட்டுத் தோட்டத்தில் புகுந்து விடும். எனவே, பணி செய்யும் யானைகள் கழுத்தில் மணியைக் கட்டியிருப்பர். அந்த யானைகள் காட்டில் புகுந்துவிட்டதை அவற்றின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணியின் ஒலியைக் கேட்டு, தோட்டத்தில் காவல் புரியும் காவலர்கள் ஓடிவந்து விரட்டிவிடுவார்கள்.

எனவே, தம் கழுத்தில் உள்ள மணி ஓசை எழுப்பாமல் இருக்க, யானைகள் மணியின் உள்ளே உள்ள நாக்கு அசையாமல் இருப்பதற்காக, அந்த மணியிலேயேசேற்றைப் பூசி அடைத்துவிடுமாம்.

அதனால் மணியிலிருந்து ஒலி எழும்பாது. எனவே யானைகள் காவல்காரர்களுக்குத்தெரியாமல் தோட்டத்தில் நுழைந்து விடிவதற்குள் வேண்டிய மட்டும் தின்று தீர்த்து விட்டு தோட்டத்தைவிட்டு வெளியேறுமாம்.

★ திப்புசுல்தான் ஆங்கிலப் படைகளோடு பலமுறை எதிர்த்துப் போரிட்டார். அவ்வாறு போரிடும் போது அவர் ஆங்கிலேயர்களிடம் சிக்காமல் பலமுறை தப்பி ஓடினார்.

அப்படித் தப்பியோடிய நேரங்களிலெல்லாம் அவர் தம் பட்டத்து யானைமீது ஏறியே சென்றார் என்று வரலாறு கூறுகிறது.

★ நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி வந்தபோது 'பாட்டரி' என்ற ஒரு படைப் பிரிவு இருந்தது.

அப்படைப் பிரிவில் பணியாற்றிய ஒவ்வொரு யானை களுக்கும் உணவு ஒரு நாளைக்கு எவ்வளவுவழங்கப்பட்டது தெரியுமா?

15 பவுண்டு வெல்லம் கலந்த மாவும் 400 பவுண்டு இலை, தழை, புல்களும், 25 காலன் தண்ணீருமாகும்.

★ கடைசி புத்தமன்னாய் இருந்தவர் ஹர்ஷ வர்த்தனன். அந்த மன்னர் புத்தரின் திருவுருவை வழிபட்டு வணங்க யானைமீது சென்றார்.

அவர் சென்ற காட்சியைப் பற்றி நம் நாட்டிற்குச் சீனாவிலிருந்து யாத்திரிகராய் வந்த ஹுவான் சுவாங் என்பவர் அழகுபடத் தம் குறிப்பில் கூறியுள்ளார்.

'ஹௌடா' என்ற தங்கத்தாலான அம்பாரிமீது மன்னன் அழகாக அமர்ந்திருந்தனாம். அந்த யானை பல வண்ணக் கலவைக் கோலங்களால் அற்புதமாய் அலங்கரிக் கப்பட்டிருந்ததாம்.

அத்தோடு யானைமீது பட்டுத் துணிகளும் போர்த்தப் பட்டு இருந்தனவாம். பொன்னும், மணிகளும் பூட்டப்பட் டிருந்தனவாம்.

★ இந்தியர்களைப் போலவே இலங்கையில் வாழ்கின்ற சிங்களவர்களும் யானைகளைப் போற்றிப் புகழ் பெற்றிருக் கிறார்கள்.

இந்திய யானைகளைப்போலவே சிங்கள நாட்டிலுள்ள யானைகளும் அழகிலும் ஆற்றிலும் சிறந்தவையே!

இலங்கை மன்னனான பாரக்கிரம பாஹு, தென் இந்தியாவின்மீது படை எடுத்து வந்து, தமிழ் மன்னர் களை வெற்றி பெற்றான் என்று வரலாறு கூறுகிறது.

அந்தப் போரில் அம்மன்னனின் யானைப்படைகள் செய்த வீரமிக்க செயல்கள் புகழ்ந்து கூறப்படுகின்றன.

★ காபூலை அரசு புரிந்த மன்னன், ஜெயபால் ஷாஹியா, அவன் கி.பி. 1000 ஆம் ஆண்டில் கைபர் கணவாய் வழியே படையெடுத்து வந்த கஜினி முகமதை முதலில் விரட்டி ஓட்டியது யானைப் படையைக் கொண்டு தான்.

★ ஆபத்துக் காலங்களில்யானைகள்வியூகம் அமைப்பது வியப்பிற்குரிய ஒன்றாய் இருக்கும்.

எதிரி தாக்க வரும் போது பெண் யானைகளைப் பின்னால் தள்ளிவிட்டு முன்னால் ஆண் யானைகள் நின்று கொள்ளும். குட்டிகளைச் சூழ்ந்தபடியே, எதிரியைத் தாக்க ஆண் யானைகள் முன் செல்லும்.

★ மிருகக் காட்சியகத்தில் உள்ள யானைகள் குட்டி ஈன்றதும், அங்குள்ள கால்நடை மருத்துவர்கள் பெண் யானையின் மடியிலிருந்து முதலில் வெளியாகும் சீம்பாலை கறந்து பாதுகாப்பாக வைத்துக் கொள்வார்கள்.

இந்தப் பால் ஆயுர்வேத மருத்துவத்தில் சிறந்த மருந்துப் பொருளாகக் கருதப்படுகிறது.

யானைப்பாலில் வேறு எந்தப் பிராணிகளின் பாலிலும் இல்லாத அளவிற்குக் கொழுப்புச் சத்து அதிகமாய் உள்ளது.

யானையின் பாலில் 7 முதல் 14 சதவிகிதம் கொழுப்புச் சத்து இருப்பதாய்க் கண்டிருக்கிறார்கள்.

★ சாந்தளர்களின் வழியில் வந்தவள், மகாதேவி துர்க்காவதி. இவள்தான் மொகலாயர்களை எதிர்த்து

நின்று போரிட்டவள் என்பதை வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

கோண்டவானா நாட்டின் இளவரசியான இவளின் ஆற்றலும், வீரமும் போற்றத்தக்கவை. இவள் எப்படி வீரமரணம் அடைந்தாள் தெரியுமா?

இருபதாயிரம் குதிரை வீரர்களும் ஆயிரம் யானைகளும் இவள் படையில் இருந்தன; ஏராளமான செல்வங்களையும் கொண்டு இருந்தாள்.

இதை உணர்ந்த எதிரியான அக்பர் சும்மா இருப்பாரா? அக்பரிடம் பெரும்படை இருந்தது. அவரின்படைபலத்தைக் கண்டு, துர்க்காவதியின் படையில் இருந்த பல ஆயிரம் பேர் அஞ்சி ஓடியே விட்டார்கள்.

அக்பர் படை மகாதேவி நாட்டின்மீது போர் தொடுத்த போது அவளிடம் இருந்த போர் வீரர்கள் ஐயாயிரம் பேர்கள் மட்டுமே. எனினும் அவள் கலங்கவில்லை, பின்வாங்கவில்லை. எதிரியை எதிர்த்து நின்று போரிடவே துணிந்தாள்.

தொடர்ந்து இரண்டு நாள் போர் நடந்தது. மூன்றாம் நாள் அவளது படையில் இருந்தவர்கள் இரண்டாயிரம் வீரர்கள்மட்டுமேமுதல்இருநாள்போரில் அவள் இழந்தவீரர்களோ மூவாயிரம்பேர் அப்போதும் அவள் கலங்கவில்லை. 'இறுதிமூச்சுவரை எதிரிகளை எதிர்ப்பேன்' என்று உறுதிபூண்டாள்.

மந்திரிகளும் தளபதிகளும் அவளைத் தப்பி ஓடச் சொன்னார்கள் அவள் இணங்கவில்லை.

தொடர்ந்து போர் செய்தாள். இறுதியில் அவள் மகனும் போரில் பலத்த காயம் அடைந்தான். அந்த நிலையில் அவளின் படையில் இருந்தவர்களின் எண்ணிக்கை 300 வீரர்களே!

வீரத்தோடு போரிட்ட அவள்மீது எதிரிகள் விட்ட இரண்டு அம்புகள் பாய்ந்தன.

மகாதேவி தன் கழுத்திலும், நெற்றியிலும் தைத்திருந்த அம்புகளைப் பிடுங்கி எறிந்தாள்; குருதி பெருகிற்று; யானைமீதே மயங்கிச் சாய்ந்தாள்.

சற்று நேரத்தில் அவள் மயக்கம் தெளிந்தது. அதே நேரம் எதிரிகள் வெற்றி பெற்றிருந்தார்கள்.

இனிச்செய்வதற்கு ஏதுமில்லை எதிரியிடம் அகப்பட்டு சிறையில் வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று அவள் எண்ணினாள். தன் இடையில் இருந்த குத்து வாளை எடுத்தாள். இதயத்தில் இறக்கிக் கொண்டாள். உயிர் துறந்தாள்.

எதிரியினிடம் நம் அரசியின் புகழ் உடல் சிக்கிவிடக் கூடாது எனக்கருதிய அவளது பட்டத்து யானை, உயிர் இழந்த அவளது உடலைச் சுமந்தபடி காட்டினுள் சென்று மறைந்தது.

★ வனத்துறையில் உள்ள யானைகள்குட்டி போட்டால் அவற்றிற்கு ஆறு மாத காலம் ஓய்வு கொடுத்துவிடுவார்கள்.

★ திருக்கடையூரில் உள்ள பாடல் பெற்ற கோயிலில் தம் மணிவிழாவைக் கொண்டாடுபவர்கள் நீண்டநாள் இணைபிரியாது வாழ்வார்கள். நல்ல ஆரோக்கியமான உடல் நலத்தையும் பெறுவார்கள் என்பது ஐதிகம்.

அதனால் 60 வயது நிரம்பியவர்கள் தம் மனைவிக்கு இரண்டாவது முறையாக திருநாண் பூட்டி மணம் செய்யும் நிகழ்ச்சிகள். இந்தக் கோயிலில் அதிகம் நிகழும்

அப்படி மணம் செய்துகொள்பவர்கள் புத்தாடை அணிந்து தாங்கள் தங்கி இருக்கும் இடத்திலிருந்து கோயிலுக்கு வருவார்கள். திருக்கடையூர் கோவில் யானை அவர்களை—மணமக்களை நேரில் சென்று ஆசி வழங்கி அழைத்து வரும்.

★ மனிதர்களின் நாடித்துடிப்பை மருத்துவர்கள், கையைப் பிடித்துப் பார்ப்பார்கள். யானையின் நாடித் துடிப்பை கால்நடை மருத்துவர்கள் எவ்வாறு அறிவார் கள்? அதன் தும்பிக்கையைப் பிடித்தா? அன்று.

யானையின் காதுக்குப் பின்னே உள்ள நரம்புகளைப் பிடித்துத்தான் கால்நடை மருத்துவர்கள் அதன் நாடித் துடிப்பை அறிவார்கள்.

யானையின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 28 முதல் 40 வரை இருக்கும். அதன் உடல் சூடு 96.4 அல்லது 97.4 டிகிரி பாரன்ஹீட் இருக்கும்.

பேரரசர் அக்பருக்கு யானை என்றால் மிகுந்த விருப்பம். அதனால்தான் அவர் தம் போர்ப்படையில் 50,000 யானைகளை வைத்திருந்தார்.

அக்பர் யானைகளைச் சண்டையிட வைத்துப் பார்ப்ப தில் அலாதியான ஆவல் கொண்டவர்.

ஒருமுறை, நாம் செல்லமாய் வளர்த்த அரண்மனை யானையான கெஜநாத்துக்கும் இன்னோர் அரண்மனை யானையான கெஜநூருக்கும் இடையே சண்டை நிகழ ஏற்பாடு செய்யுமாறு கட்டளையிட்டார்.

அதன்படியே யானைச் சண்டை படைவீரர்கள், பார்வையாளர்கள் ஆகியோர் முன் நடந்தது. எப்படி?

முதலில் நான்கு ஜோடிசாதசரண யானைகள் மோதிக் கொண்டன. அந்த மோதலில் ஆக்ரோஷமோ, விறு விறுப்போ இல்லை, ஒன்றை ஒன்று குப்புறத்தள்ளி விடுகிறமாதிரி இருந்தது. மன்னர் அக்பர் எதிர்பார்த்த விறுவிறுப்பு இல்லை. அது முடிந்ததும், ஒரு படைவீரன் களத்திலே வந்து நின்றான். "கெஜநாத், கெஜநூர்!" என்று உரத்த குரலில் கத்தினான். உடனே அக்பரின் அன்பு வளர்ப்பான அரண்மனை யானை கெஜநாத்தும் இன்னோர் அரண்மனையானையானகெஜநூரும் களத்தை நோக்கி வந்தன.

வருபவை யானைகளா கருநிற மலைகளா எனப் பார்ப்போர் வியக்கும் வண்ணம் அவை வந்ததைக் கூட்டத் தினர் பார்த்தனர்.

கெஜநாத் யானையின் மீதே அக்பரின் விழிகள் பதிந்திருந்தன.

அது வெற்றிக் கொடியை ஆட்டுவதைப்போலத் தும்பிக்கையைத் தூக்கி ஆட்டியபடியே வந்தது. மற்ற யானையும் எதிரே வந்தது.

கெஜநாத்தின் பிளிறல் அவையோரை மெய்சிலிர்க்கச் செய்தது. கெஜநூரும் அதன் தோற்றத்திற்கும் பிளிற லுக்கும் இளைத்ததாய் இல்லை.

அவ்விரண்டின் பின்னால் பாகர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

சண்டை நடக்கும் வட்டத்திற்குள் யானைகள் இரண்டும் வந்ததும் பாகர்கள் விலகிக்கொண்டார்கள்.

பார்வையாளர்களிடம் அமைதி தோன்றியது.

அடுத்த கணம் இரு மலைகள் மோதிக் கொள்வதைப் போல் அவ்விரு யானைகளும் மோதிக்கொண்டன. அதைக் கண்டு மூச்சுப் பேச்சற்று பிரமித்திருந்தனர் அவையினர்.

முதலில் சற்று நேரத்துக்கு கெஜநாத் தடுமாறிக் கொண்டே இருந்தது. கெஜநூர் அதை நேருக்கு நேராய்த் தலையோடு தலை மோதவில்லை. பக்கவாட்டாக ஓர் இடி. மல்லாந்து விழ்ந்தது கெஜநாத், ஆனால் மறுநொடியே எழுந்துவிட்டது. இரண்டாம் முறையும் கெஜநூர் இன்னோர் இடி இடித்தது. மறுபடியும் கெஜநாத் விழுந்து எழுந்தது.

அதனதன் பாகர்கள் கூடவே சுற்றிச்சுற்றி வந்தார்கள். விடாதே கெஜநாத்! விடாதே மோது கெஜநூர்! அப்படித்தான்! சபாஷ்! இந்தப் பக்கம்! இப்படிக் குத்து!" இவ்வாறு பாகர்களின் தூண்டுதல் ஆரவாரம் ஒரு பக்கம் தாரை, தப்பட்டை, கொம்புகளின் பேரொலி இன்னொரு பக்கம். எந்த யானையின் துதிக்கை ஓங்கியிருக்கிறதென்பது தெரியாதளவு புழுதித்திரை எழுந்து மறைத்தது.

சிறிது சிறிதாக கெஜநாத்தின் போக்கு மாறியது. கெஜநூர் இடிக்க வரும் சமயம் அது. ஒதுங்கிக்கொண்டது, அதனால் கெஜநூர் ஏமாற்றமுற்று மோத வந்த வேகத்தில் தடுமாறியது. கெஜநாத்துக்கு நீண்ட தந்தம் இருந்தது. அது அதைக் கொண்டு கெஜ

நூரின் காதுக்குக் கீழே குத்தியது. குத்தப்பட்ட இடத்திலிருந்து குருதி பீறிட்டது. அதனால் கெஜநூர் கத்திய கத்தல் அவை யோரை ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

அக்பார் அமைதியாய் இருந்தார்.

தன் உடலில் பீறிட்டுவரும் குருதியைக் கண்டதும் கெஜநூருக்கு வெறிஉண்டாயிற்று. அது தன்பலமனைத்தை யும் பயன்படுத்தி தன் துதிக்கையால் கெஜநாத்தின் துதிக்கையை வளைத்து மடக்கிப் புரட்டியது, மல்லாந்து விழுந்த கெஜநாத்தின் வயிற்றில் அழுக்கியது. ஆனால், நெளிந்து புரண்டு தப்பித்துக் கொண்டது, கெஜநாத்.

உடல் வலிமையைவிட மூளை வலிமை சிறந்தது என்பதை அது உணர்ந்து கொண்டது.

பின் அது, கெஜநூரை இப்படியும் அப்படியும் அல்லாட வைத்தது.

கொட்டு மேளங்களின் சத்தம் காதைச் செவிடுபட வைத்தது. மக்களின் ஆரவாரமும் ஒருபுறம் ஓங்கி ஒலித்தது.

நேரம் ஆக ஆக கெஜநூருக்கு களைப்பும் ஆத்திரமும் ஏற்பட்டது. படிப்படியாய் அது தள்ளாடத் தொடங் கியது. ஆங்காரப் பிளிறல்கள் அதிகமாயின. கெஜநூர் சற்று ஏமாந்து கீழே விழுந்தது. உடனே தன் துதிக் கையால் அதை ஒரு புரட்டு புரட்டி மல்லாந்து கிடக்கச் செய்தது, கெஜநாத், பின் தன் கூரிய கொம்பினால் கெஜ நூரின் நடு வயிற்றில் குத்தியது, வேகமாய்க் குத்தியதால் முழுத்தந்தமும் கெஜநூரின் வயிற்றில் உள்ளே பாய்ந்துவிட்டது. கெஜநூர் துடி துடித்தது. கெஜநாத் தன் தந்தத்தை கெஜநூரின்

உடலிலிருந்து வெளியிலெடுக்கப் பெரும் பாடுபட்டது. தரையெங்கும் இரத்த மயம்.

கெஜநூர் இனி எழுந்திருக்காது என்று நிச்சயமாகி விட்டது.

சபை எங்கும் ஆரவாரம். அக்பரோ தம் மகிழ்ச்சியை கட்டுப்படுத்தியபடியே அமர்ந்திருந்தார்; எழுந்தார், திவான் பணிவுடன் வெள்ளித்தட்டில் வைத்த வெற்றிமுகா படாமை நீட்டினார். அக்பர் தம் பச்சைக் கற்கள் பதித்த சிவப்புத் துணியைத் தன் செல்ல யானையின் நெற்றியில் பொருத்தினார்.

அக்பர் கையை உயர்த்தினார் உடனே அடிபட்ட யானை அகற்றப்பட்டது. அவருக்கான மூடு பல்லக்கு கொண்டுவரப்பட்டது.

அக்பர் சொன்னார்: "வெற்றி பெற்ற இந்தத் தீரமான யானைக்கு 'கெஜவீர்' என்று பெயர் சூட்டு கிறேன். என்னுடைய சொந்தக் குதிரையான நூர் பைஜா வையும், சொந்த ஒட்டகமான ஜமாஜாவையும் போல கெஜவீரும் இனி என் சொந்த யானையாய் இருக்கும்" என்றார்.

★ யானைகளுக்கு உடல் நலம் இல்லாதபோது ஊசி போடுவது உண்டு அந்த ஊசி நீண்டதாய் இருக்கும். மனிதர்களுக்குச் செலுத்தப்படும் மருந்தைப்போல இருபது மடங்கு மருந்தை யானைக்குச் செலுத்துவார்கள்.

★ இறந்த ஒரு மரக்கட்டையைப் புரட்டிப்போட்டு அறுக்கக் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது. இறந்த யானையை எப்படிப் புரட்டிப்போட்டு அறுக்க முடியும்? முடியாதுதான்!

அப்படிப் புரட்டிப் போடுவதற்கு யானைகளையே பழக்கி வைத்திருப்பார்கள். அந்தப் பணிகளை அந்த யானைகள் செய்யும்.

★ ஒரு யானையின் இதயம் 30 முதல் 40 பவுண்டு எடையுள்ளதாய் இருக்கும்; ஈரல் 86 பவுண்டு எடையுள்ளதாய் இருக்கும். ★

## யானைகளைப் பற்றிய பழமொழிகள்

★ யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே.

★ யானை வாயிலே போன கரும்பு.

★ யானைக்கு ஒரு குட்டி; பன்றிக்குப் பலகுட்டி.

★ யானையின் வாலைப் பிடித்துக் கரை ஏறலாம்.

ஆட்டின் வாலைப்பிடித்துக் கரை ஏற முடியுமா?

★ யானை செத்தால், தந்தம்; புலி செத்தால் தோல்.

★ யானை விற்றால், யானை இலாபம்; பானை விற்றால், பானை இலாபம். —இந்தியப் பழமொழி

★ யானையின் வாலைப் பிடித்துக்கொண்டிருக்கிறீர்கள். அது ஓடப் பார்க்கிறது. ஓட விட்டுவிடுவதே மிகவும் மேலானது. —ஆபிரகாம் லிங்கன்

★ கருநீல நாக்குடைய ஒழுங்கற்ற கோணலான பல்லுடைய அல்லது பற்களே இல்லாத யானை நீண்ட நெடுங்காலம் குரோதம் பாராட்டுவதாய் இருக்கும். ஆகவே, அது அரசனின் படையில் இருக்கக்கூடாது. —இராணுவப் பழமொழி

★ யானை குழியில் விழுந்தால், தவளைகூட பின்னால் வந்து உதை கொடுக்கும்.

★ யானை படுத்தாலும் குதிரை மட்டம்.
—இந்தியப் பழமொழி

★ ஆயிரம் கொடுத்து ஆனை வாங்கினவன் அரைக்காசு கொடுத்து அங்குசம் வாங்கமாட்டானா?
—இந்தியப்பழமொழி

★ யானை, அசைந்து தின்னும்; வீடு, அசையாமல் தின்னும். —இந்தியப் பழமொழி

யானையும் பூனையும் ஒன்றாகுமா?
—இந்தியப் பழமொழி

னக்கு ஒரு காலம் என்றால் பூனைக்கு ஒரு வரும்.

தம் அடி சறுக்கும்.

★ யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்.

★ யானை கொழுத்தால் தன் தலையிலே மண்ணை வாரிக்கொட்டிக்கொள்ளும்.

★ யானைப் பசிக்கு சோளப்பொறி தாங்குமா?

★ யானை கொழுத்தால், வாழைத்தண்டு; ஆண் பிள்ளை கொழுத்தால், கீரைத்தண்டு.

—இந்தியப் பழமொழி

—முற்றும்—

மணிமேகலைப் பிரசுரம்
சென்னை-600017

மலர் பிரிண்டர்ஸ், சென்னை 34. ✆: 8224803